உ

சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும் திருவருள் பூண்டது.

இதழ் 1 | பிங்களவருஷம் மார்கழிமாதம் 15 ம் திகதி வெள்ளிக்கிழமை [30-12-1977] | சுடர் 5

## என்நாயகன் விநாயகன்

ஐந்து திருக்கரமுடையவராய் யானை முகம்உடையவராய்செஞ்சடை மீது பிறை சூடியவராய் அருள் பொழியும் மூன்று திருக்கண்ணுடன் இளம் பிறைபோன்று வளைந்த கொம்பினை உடையவராய் நாகபாம்பினை பூநூல் ஆக அணிந்த புண்ணியராய என் கண்மணி விநாயகப் பெருமான் சர்வ வல்லமையுடன் திருக்கைலாய மலையில் அமர்ந்தருளுகின்றார்.

குழந்தை வடிவான எம் கடவுள் அங்கிருப்ப அவர்பாலாக முன்புள்ளபூதகணங்கள் மொய்த்து முன்னாகச் சூழ்ந்திருப்ப நந்தியெம் பெருமான் வந்து திருவடி .வணங்க நான் முகமுடைய பிரமதேவர் முதலிய கடவுளர் நித்தலும் வந்து திருவடி போற்றிட மகிழ்வுடன் இருந்தருளுகின்றார்.

அதன் பின்பாக ஓர் நாள் நாராயணக் கடவுள் புனிதனாகும் சிவனைக் காணும்படி மி[illegible]ளிடும் குளிர்ந்த ஒளியுடைய வெள்ளி மயமாகும் திருக்கைலாய மலைக்கு வந்து அங்குள்ள கோயிலினைச் சேர்ந்து கொண்டார். சேர்ந்த அவர் சிவன் அருளால் நந்தி தேவர் உட்புகுமாறு விடுத்திட உட்சென்றருளி பெண் ஒருபாகனாகும் எம்பெருமான் சிவனை கண்டு பரவசமாகி மனதில்எழும் ஆர்வத்துடன் போற்றி செய்தார்.

உலகுய்ய நடமாடும் கடவுள் வந்தனை புரிந்த நாராயணக் கடவுளை முன்பாக இருப்பாய் என இருத்திய பின்னர் தமது இடப்பக்கத்தில் அமர்ந்த உலகைப் படைத்த ஒருத்தி உமையம்மையை நோக்கி உனக்கு ஒன்று சொல்வோம் கேட்பாய் என்று; உலகம் உய்ந்திடும் ஓர் அருட்பாடுடைய ஆடலை நினைந்தருளி இதனைக் கூறுகின்றார்.

எம் முடன் நீ சூதினை ஆடுவாய். அதில் பந்தயமாக கொள்வது எப்படியெனில்; எம்முடன் ஆதிப்பொருளாய நீ தோற்பாய் என்றால் நீ அணிந்த ஆபரணம் யாவையும் கொடுத்திடுவாய். அன்றி வென்றிடுவாய் என்றால் எமது பெரும் பொருளாயஇளம் பிறை முதல் பல பொருளையும் பெற்றுக் கொள்வாய்.

என இப்படி சிவபிரான் மொழிதலும் உமையம்மை அதற்கு இசைந்து கொள்ளலும் அந்த அளவில் முன்னிருந்த நாராயணப் பெருமானை நோக்கி பரந்தாமனே நீ இந்த சூதாட்டத்தில் சரி பிழை சொல்லும நடுவனாக அமைதி என்றார் எங்கடவுள்.

யாது ஒருவிருப்போ வெறுப்போ இன்றி எல்லா உயிரையும் அவரவர் வினைக்கேற்ப வழி நடத்தும் சிவ மூர்த்தி இதனைச் சொல்லியருளலும் நாராயணப் பெருமானும் சுவாமி இது நல்ல காரியம் என்று அந்தப்பெரிய சூதாட்டத்திற்குநடுவனாகஅமர்ந்தார்.

இந்தவாறு. நிகழ்ச்சியாயிட அவ்வேளை ஆலால சுந்தரன்முதல் தொண்டர்கள் யாவரும் எந்தை பெருமான் திருமுன்பு சூதாடற்குரிய கருவிகாய்களைக்கொணர்ந்துவைத்தார்கள்.நாராயணப் பெருமான் சிவபிரான் ஆணைவழி அக்ககருவியில் காய்களை முறையாக வைத்தனர். சிவபிரான்அதுவேளை அம்பாளைநோக்கிநீ நமக்கு முன்பு வருக என அருள்புரிய அம்பிகையும் அப்பன் திருமுன்பு எழுந்திருந்து சூதாட்டக் கருவியை முன்னர் உருட்டி எண்படி காய்களை நடத்திட ஐயனும்தாமும் கருவியை உருட்டி எண்படி காய்களை நடத்தினர்.

சூதாட்டம் அதி உக்கிரமாகச் செல்கின்றது. இருவரும் அதிஉற்சாகமாகக் காய்உருட்டி ஓர் அஞ்சு பஞ்சு பாலை இரண்டு நடம் வெட்டு இப்படி மகிழ்வுடன் பேசிப் பேசி சூதாடினர்.

அப்படி யான வேளையில் எம்பிரான் சிவன் அவர் ஆடல் யார்க்கும் எட்டோணாதாவது என்னவோ எமக்குத் தெரியாது தன் முன்னாக இருந்து சூதாடிய எம் அம்மைக்கு தோற்றார். காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடும் கடவுள் உலகுய்ய எடுத்த தமது திருவிளையாடலாம் இச்சூதில் உகல முதல்விக்கு தோற்றது மன்றி அவளை நோக்கி கௌரியே நான் தோற்கவில்லைநீயேதோற்றாய் என்று;ஆதலின் உனது அணிகலன் யாவும் முன்புள்ள இசைவின் படி எமக்கு தந்து நில்என்றார்.

அம்பாள் கேட்டலும் திகைத்தனள். தனது நாயகன் தவறாக மொழிகின்றார் என்பது தெரிந்தும் அவரை எதிர்த்து வாதாடுவது தகாது என்பதனால் அச்சமுற்று நடுவனாக இருந்த நாராயணப் பெருமானை நோக்கி; நீ இச் சூதாடத்திற்கு சாட்சியாக அமைந்தாய் யார் வென்றது சொல் என கேட்டருளினாள்.

அம்பாள் சொல்லிய அந்தஅளவில் சுடரும் சக்கரப் படை ஏந்திய கடவுள் நாராயணப் பெருமானும் சொல்வார்''சூதே நீரம்பிய இப்பெரும் போரில் வெல்லும் தகுதி உடையவர் சிவன்'' என்று; அன்றும் இன்றும் என்றும் உள்ள பரம் பொருளின் தகவினை உணர்ந்தாதுணர்த்தி மொழிந்தார்.

அது கேட்டலும் அம்பாளுக்கு அளவிறந்த கோபம் வந்தது. நல்லது நீ சொன்ன மாயம் என்று அவரை நோக்கி சொல்வாள். ''நீ இச் சூதை பாராமல் இருக்கவில்லை. அதோடு பார்வையின் வலியால் கண்ணன் என்னும் பெருடைய வனுமாயினை பக்கரராக இருந்தனை: நீ அறியாத தொன்றிலை யாவருமே தெரிய முடியாத ஆதிக்கும் ஆதியாய பெருமான் இப்படி மொழிந்தாலும் நீ பேசலாமோ? உனது மேனி கருமை என்பர் அதேபோன்றுஉள்ளமும் வஞ்சனை நிறைந்த கறுப்போ?

எனக்கு முன்பாக இதைச் சொன்னாய். இது நீ உலகில் என்றும் வஞ்சனையின் மிகுதியானமாயம் செய்பவன். அந்த தொடர்ச்சிப் பழக்கத்தால் அஞ்சாது என் முன் கூறினாய். ஆதலின் நீ பாம்பாகக் கடவாய் என சாபமிட்டாள் கௌரி அம்மை. அம்பாள் இதை மொழிந்த அவ்வளவில் நாராயணக் கடவுளிடமாக அப்பாம்பு உருவம் வந்தடைந்திட அது கண்ட கண்ணபிரானும கவலை கொண்டு செக்கர் போலும் முடியுடைய கடவுள் சிவமூர்த்தி முன் சென்றுதிருவடி பணிந்து பெருமானே! இக்கொடுமை எனை வந்தடைந்தது இது எவ்வாறு நீங்கும் மொழிந்தருள்க தேவாதி தேவனே என வணங்கினார்.

காற்றாகி வெளியாகி நீராகி நெருப்பாகி பூமியாகி மேலுள்ள எப்பொருளுமாகி எல்லாவற்றிற்கும் வித்தாகி நான்கு வேதமும் சுட்டி நின்ற உண்மை பொருளாய நாதன் தம்மை வணங்கிய திருமாலுக்கு இதனை மொழிகின்றார்.

நாராயணனேநீநம்பால் கொண்ட அன்பால் இது சொன்னாய். இந்த வடிவம் பெற்றாய் நின்னிடத்து வரும் இன்னலை நாம் நீக்குவோம். நீயும் அதனின்றும் நீங்கிடுவாய். எப்படிஎனில் தென் திசையில் உள்ள உலகில் ஓர் தேசத்தில் ஆலவனம் எனும் வனமொன்றுளது. அங்கு அந்த வனத்திற்கு நீ விரைவுடன் செல்வாயாக. சென்றால் அவ்வனத்தில் ஓர்பெரிய ஆலமரம்உண்டு! அதன் அடியில் ஓர் பொந்து இருப்பது. அதனை நீ கண்டிருப்பாய். அந்தப் பொந்தினுள் நீசென்று இருப்பாயாக. அவ்வணம் அங்கிருக்கும் காலத்தில் யானே எனும்படியான என் குமரன் விநாயகன் கயமுகாசூரனைச் சங்கரித்து பின்னாக அவ்வழியால் வருவான். வருகின்ற அந்த எல்லா உயிர்க்கும் நன்மை தருகின்ற செவ்விய என் மகனை எதிர்கொண்டு அணைந்து சென்று கண்டபோது உன்னை இன்று அடைந்த இப்பாம்பு உருவம் நீங்கும் என்றார்.

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)

## கண்ணைத் துயின்று அவமே காலத்தைப் போக்காதே

உலகில் மனிதப் பிறவி எடுத்த நாம் விபரமறியாத குழந்தைப் பருவம் நீங்கி எம்மைப் பற்றிய அறிவு தொடங்கிய பிற் பாடு ஓரளவு நாம் நடந்து கொள்ளும் முறைபற்றி சிந்தித்தல் நலம். இந்தவொரு சிந்தனையை மாணிக்கவாசக சுவாமிகள் கொள்கின்றார். அவர் நல்ல நற்பயன் தரும் கருத்துக்களை தமது பாடல் மூலம் தருகின்றார்.

அவற்றுள் திருவெம்பாவை என்னும் பாடல் ஒன்று. அப்பாடலை மார்கழி மாசத்து எல்லா ஆலயங்களிலும் ஓதி விழா வெடுக்கின்றோம். அப்பாடலை கேளாத சைவமக்கள் இவ்வுலகில் இருக்கார்கள் என்ற அளவிற்கு அப்பாடல் வருடாவருடம் ஓதப்பட்டு வருகின்றது.

இந்த மாணிக்க வாசகருடைய திருவெம்பாவை திருவாசகத்துள் உளது. மாணிக்கவாசகருடைய திருவாசகத்தை நன்கு உணர்ந்து கொண்ட பெரியார்கள் முன்னர் காலம் தொட்டே அப் பாடல் களுக்கு ஓர் தத்து

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழின் ஆகமம் திருமந்திரம்

## சென்ற இதழ் தொடர்ச்சி - கடவுள் வாழ்த்து

வானப் பெருங்கொண்டல் மாலயன்வானவர்
ஊனப் பிறவி ஒழிக்கும் ஒருவனைக்
கானக் களிறு கதறப் பிளந்தஎங்
கோனைப் புகழுமின் கூடலு மாமே.

வானில் உள்ள பெரு மேகம் போலும் வடிவுடைய திருமாலும் பிரமன் தேவர்களது ஊனம் உடைய பிறவியை ஒழிக்கின்ற ஒருவனாய சிவனை காட்டானை யாய கயாசூரன் கதறிடப் பிளந்த எங்கடவுளை புகழ்ந்து பாடுமின் பத்தர்கள். பாடினால் அவனைக் கூடிடவும் கூடும். 21

மனத்தில் எழுகின்ற மாயநன் னாடன்
நினைத்த தறிவ னெனில்தான் நினைக்கிலர்
எனக்கிறை அன்பிலன் ஏன்பர் இறைவன்
பிழைக்கநின் றார்பக்கம் பேணிநின் றானே.

மனத்தில் எழுகின்ற எண்ணங்களை; மாயவடிவாய உலகங்களை உடைய சிவன் தானே அவ்வெண்ணங்களை அறிவான் என்றால் அவனை ஏன் நினைக்கின்றாரில்லை. நமக்கு வாழ்க்கையில் சில வசதிக் குறைவுகள் வந்தபோது எனக்கு கடவுள் அன்பிலன் என்பார்கள். ஆனால் அவனே உய்ய நிற்பாரிடத்து அவரைப் பெற்ற தாய் போல் ஆதரித்து பேணி நிற்கின்றானே. 22

வல்லவன் வன்னிக் கிறையிடை வாரணம்
நில்லென நிற்பித்த நீதியுள் ஈசனை
இல்லென வேண்டா இறையவர் தம்முதல்
அல்லும் பகலும் அருளுகின் றானே.

சர்வவல்லமை உடையவன் சிவன். அவனே கடலிடத்து உள்ள நீரில் நெருப்பாய தேவனை நில் நீ என்று நிற்பித்தவன். அது ஒரு நீதியாம்படி செய்வித்த முற்றிலும் நீதியான கடவுளை இல்லை என்று சொல்ல வேண்டாம். அவன் எல்லாத் தேவர்கட்கும் முதன்மையானவன். 23

போற்றிசைத் தும்புகழ்ந் தும்புனி தன்னடி
தேற்றுமின் என்றுஞ் சிவனடிக் கேசெல்வம்
மாற்றிய தென்று மயலுற்ற சிந்தையை
மாற்றிநின் றார்வழி மன்னிநின் றானே.

போற்றியும் பாடியும் புகழ்ந்தும் புனிதன் திருவடியே காணத் தெளிவு கொள்மின். எமது செல்வம் பொருள் யாவும் சிவனடிக்காகவே நான் மாற்றிக் கொண்டது என்று: அதுவல்லாது வேறு காரணமாக அச்செல்வத்தை சென்றிட உய்க்க மயங்கும் மையல் கொண்ட சிந்தையை மாற்றி நின்ற பெரியோர் வழியில் அவனும் பொருந்தி நின்றான். 24

பிறப்பிலி பிஞ்ஞகன் பேரரு ளாளன்
இறப்பிலி யாவர்க்கும் இன்பம் அருளும்
துறப்பிலி தன்னைத் தொழுமின் தொழுதால்
மறப்பிலி மாயா விருத்தமும் ஆமே.

எம்பெருமான் பிறப்பிலாதவன் என்றும் தனியாயவன்; பேரருள் உடையவன்: இறப்பில்லாதவன் யாவர்க்கும் இன்பம் கொடுப்பதை நீக்காதவன், அப்பகவானை தொழுமின் தொழுதால் உங்களை மறவான். இறவாமைக்கு வழியும் அதுவாகும். 25

தொடர்ந்துநின் றானைத்தொழுமின்தொழுதால்
படர்ந்துநின் றான்பரி பாரக முற்றுங்
கடந்துநின் றான்கம லம்மலர் மேலே
உடந்திருந் தானடிப் புண்ணிய மாமே.

என்றும் உம்மைத் தொடர்ந்து நின்றானைத் தொழுமின்; தொழுதால் உம்மைப்பற்றி நின்றான் எங்குமாய்ப் படர்ந்து நின்றான். அன்றியும் அனைத்தையும் சுமக்கும் பூமி முதல் யாவையும் கடந்து நின்றான். உள்ளத்துள்ள தாமரை மலர் மேலே அன்புடன் உடனுகி இருந்தான். அவன் திருவடி தொழல் புண்ணியமாகும். 26

சந்தி எனத்தக்க தாமரை வாண்முகத்
தந்தமில் ஈசன் அருள்நமக் கேயென்று
நந்தியை நாளும் வணங்கப் படுமவர்
புந்தியி னுள்ளே புகுந்துநின் றானே.

இரவும் பகலும் சந்தித்தலால் சந்தி எனப்பட்ட மாலையின் நிறமாய சிவப்பின் நிறமுடைய தாமரைப் பூவினைப் போன்ற ஒளியுடைய முகம் உடைய முடிவிலாத ஈசன் அருள் நமக்கு உண்டு என்று குருமணியாய நந்தியை நாள்தோறும்வணங்கப்படும் அவர்களுடைய புத்தியிலே அப்பெருமான் பொருந்தி நின்றான். 27

இணங்கிநின் றான்எங்கு மாகிநின் றானும்
பிணங்கிநின் றான்பின்முன் னுகிநின் றானும்
உணங்கிநின் றான்அம ராபதி நாதன்
வணங்கநின் றார்க்கே வழித்துணை யாமே.

யாவும் தோற்றி வாழ இணக்கமுடன் நின்றான் அவன் எங்குமாகி நின்றான். ஆனால் அவனைக் காண அருட்கண் பெறாதார்க்கு தெரியாது நின்றான். எமக்கு முன்னாகவும் பின்னாகவும் நின்றான். அவர் சிந்தையாலும் உணரமுடியாது மறைய நிற்பவன். தேவ உலகிற் கெல்லாம் நாயகன். அவனை வணங்கி நின்றார்க்கே வழித்துணையாயவன். 28

காணநில் லாயடி யேற்குற வாருளர்
நாணநில் லேன்உன்னை நான்தழு விக்கொளக்
கோணநில் லாத குணத்தடி யார்மனத்
தாணிய ஞகி அமர்ந்துநின் றானே.

எம்பெருமானே உன்னைக்காண நிற்பாய். உன் அடியேற்கு உன்னையன்றி உறவாவர் யாவருளர். உன்னை நான் அணைந்திட நாணமாட்டேன் என வணங்கிடும் கோணல் இல்லாத உறுதியாய குணமுடைய அடியார் மனத்தில் ஆணியாகி அமர்ந்திருந்தான் எம்பிரான் சிவன். 29

வானின் றழைக்கும் மழைபோல் இறைவனும்
தானின் றழைக்குங்கொல் என்று தயங்குவார்
ஆனின் றழைக்கு மதுபோல்என் நந்தியை
நானின் றழைப்பது ஞானங் கருதியே.

உயிர்கள் வாழ்ந்திட வானில் நின்று தோற்றிய மழையினைப் போன்று கடவுளும் நமக்கு அருள் புரிவானோ எனத் தயக்கப்படுவார்கள். ஆனால் பசு தனது கன்றை நினைந்து கதறுவது போன்று என் குருமணி நந்தியை நான் இங்கு நின்று அழைப்பது ஞானத்தின் பொருட்டாகும். 30

மண்ணகத் தான்ஒக்கும்வானகத் தான்ஒக்கும்
விண்ணகத் தான்ஒக்கும் வேதகத் தான்ஒக்கும்
பண்ணகத் தின்னிசை பாடலுற் றானுக்கே
கண்ணகத் தேநின்று காதலித் தேனே.

மண் ஆய இப்பூமியில் வாழ்வார்க்கும் பொன் ஆய வான உலகில் வாழ்வார்க்கும் அதற்கும் அப்பாலாய விண்ணில் வாழும் கடவுளர்க்கும் யாவர்க்கும் இரும்பைப் பொன்னாக்கும் குளிகை போல்பவன். பண்ணின் இனிய இசையாகி நின்று பாடியருளும் பாடலுமான பரமனுக்கு என் கண்ணால் காணும் பொருளாகக் கொண்டு காதலித்தேன். 31

தேவர் பிரான்நம் பிரான்திசை பத்தையும்
மேவு பிரான்விரி நீருல கேழையுந்
தாவு பிரான்தன்மை தானறி வாரில்லை
பாவு பிரான்அருட் பாடலு மாமே.

தேவர்களது பெருமான் நமது பெருமான் திசை பத்திலும் இருந்த பெருமான். விரிந்த நீர் சூழ்ந்த உலகம் ஏழையையும் கடந்த பெருமான். அவனது இயல்பினை இன்னவாறென்று அறிவார்யாருமில்லை. அவன் பால் சேர்வதற்கு உற்ற அருட்பாடலாயும் அப்பெருமான் உளன். 32

பதிபல வாயது பண்டிவ் வுலகும்
விதிபல செய்தொன்று மெய்ம்மை உணரார்
துதிபல தோத்திரஞ் சொல்லவல் லாரும்
மதியிலர் நெஞ்சினுள் வாடுகின் றாரே.

முன்னமே தொட்டு இவ்வுலகத்து கடவுளர் பலவாயது. அவ்வாறான அந்தக் கடவுள்கட்கு விதிமுறை கிரியை பல செய்தும் இன்னமும் மக்கள் உண்மை உணரார். அக்கடவுளரை துதிகள் புல தோத்திரங்கள் சொல்ல வல்லாரும் இன்னமும் நல்உணர்வு கொண்டிலர். நெஞ்சில் கவலையால் வாடுகின்றார். 33

சாந்து கமழுங் கவுரியின் கந்தம்போல்
வேந்தன் அமரர்க் கருளிய மெய்ந்நெறி
ஆர்ந்த சுடரன்ன ஆயிர நாமமும்
போந்தும் இருந்தும் புகழுகின் றேனே.

சாந்தின் வாசனை கமழும் மயிரின் வாசனைபோல் எங்கள் கடவுள் தேவர்க்கு அருள்புரிந்த மெய்நெறியாக பிரகாசிக்கின்ற சுடர்போலும் ஆயிர நாமங்களை போகும் போதும் இருக்கும் போதும் நான் புகழ்கின்றேனே. 34

ஆற்றுகி லாவழி யாகும் இறைவனைப்
போற்றுமின் போற்றிப்புகழ்மின் புகழ்ந்திடில்
மேற்றிசைக் குங்கிழக் குத்திசை எட்டொடு
மாற்றுவன் அப்படி யாட்டவு மாமே.

இந்த உலகில் செய்யப்படும் சன்மார்க்க வழியால் பெறப்படும் ஈசனை போற்றுமின்; போற்றிப் புகழ்மின்: புகழ்ந்திட்டால் மேலான திசையும் கிழக்கு முதல் எட்டுத் திசையும் உங்கள் வசமாக மாற்றுவன். அப்படி அத்திசைகளை எல்லாம் உம்விருப்பப்படி ஆட்டவும் முடியும். 35

அப்பனை நந்தியை ஆரா அமுதினை
ஒப்பிலி வள்ளலை ஊழி முதல்வனை
எப்பரி சாயினும் ஏத்துமின் ஏத்தினல்
அப்பரி சீசன் அருள்பெற லாமே.

அப்பனை எந்நந்தியை ஆராஅமுதினை ஒப்பில்லாத அருள்வள்ளலை ஊழிக்கு முதல்வனை எந்த வகையாலும் நீர் வணங்குமின் வணங்கினால் அப்பரிசாக நீர் ஈசன் அருள் பெறலாகும். 36

நானும்நின் றேத்துவன் நாள்தோறும்நந்தியைத்
தானும்நின் றான்தழல் தானொக்குமேனியன்
வானில்நின் றார்மதி போல்உடல் உள்ளுவந்
தூனில்நின் றாங்கே உயிர்க்கின்ற வாறே.

நானும் நின்று என் கடவுள் நந்தியை நாள் தோறும் ஏத்துவன். அவனும் என் வழிபாட்டிற்கு இரங்கி நின்றான். நெருப்பை ஒத்த மேனியை உடையவன். அவனைச் சொல்லப் போனால் வானில் நின்று விளங்கி ஒளிரும் பூரண சந்திரனைப் போன்று ஊனாய உடம்பில் நின்று அவன் உயிர்க்கின்ற வாறு. 37

பிதற்றொழி யேன்பெரி யான்அரி யானைப்
பிதற்றொழி யேன்பிற வாஉரு வானைப்
பிதற்றொழி யேன்எங்கள் பேர்நந்தி தன்னைப்
பிதற்றொழி யேன்பெரு மைத்தவன் நானே.

நான் பிதற்றுதலை ஒழியேன் பெரியவனை அரியவனை. நான் பிதற்றுதல் நீங்கேன் பிறவாத உருவானனை. நான் பிதற்றுதலை விடேன் எங்கள் பேர் பெற்ற குரு மணி நந்தியை. நான் பிதற்றுதலை ஒரு போதும் விலக்க மாட்டேன். தவத்தினால் பெருமையுற்ற தபோதனன் நான். 38

வாழ்த்தவல் லார்மனத் துள்ளுறு சோதியைத்
தீர்த்தனை அங்கே திளைக்கின்ற தேவனை
ஏத்தியும் எம்பெரு மான்என் றிறைஞ்சியும்
ஆத்தஞ்செய் தீசன் அருள்பெற லாமே.

வாழ்த்த வல்லவர்களது மனத்து உள்ளிருந்த சோதியை; தீர்த்தனை; அங்கு திளைத்து ஆர்த்து ஆடும் சோதியை சிவனை; போற்றியும் எம்பெருமான் என்று வணங்கியும் அவனுக்கு ஆளாக்கினால் ஈசன் அருள் பெறலாமே. 39

குறைந்தடைந் தீசன் குரைகழல் நாடும்
நிறைந்தடைசெம்பொனின்நேரொளிஒக்கும்
மறைந்தடஞ்செய்யாதுவாழ்த்தவல்லார்க்குப்
புறஞ்சடஞ் செய்யான் புகுந்துநின் றானே.

மிகவும் தாழ்வான மனப்பாங்குடன் ஈசனது சிலம்பணிந்த திருவடிகளை நாடுங்கள். நாடினால் குறைவிலாத நிறைவாய செம்பொன்னின் நேராய ஒளியாகி விளங்குவான். வஞ்சனையால் மறைந்து அடமான செயலை உலகில் செய்யாது அவனை வாழ்த்த வல்லார்க்கு புறத்தேயாய ஓர் உருவமாய பிறவி செய்யான். உள்ளாய் அவன் புகுந்து நின்றான். 40

சினஞ்செய்த நஞ்சுண்ட தேவர் பிரானைப்
புனஞ்செய்தநெஞ்சிடைபோற்றவல்லார்க்குப்
பனஞ்செய்த வாள்நுதல் பாகனும் அங்கே
இனஞ்செய்தமான்போல் இணங்கிநின்றானே

உலகை அழித்திட சினம் கொண்ட நஞ்சு உண்ட தேவர் பெருமானை நன்மை விளைந்திடக் கொண்ட நெஞ்சின் இடையாக வைத்து போற்றிட வல்லார்க்கு யாவும் படைத்தருளும் ஒளியுடைய நெற்றி கொண்ட உமையம்மை பாகனும் அங்கே தன் இனத்தை நாடிடும் மான் போல் இயல்பில் இணக்கமாய கருணையுடன் நின்றான். 41
"இந்த நிலையை நன்னர் நெஞ்சத்து இன்னிசை வாய்ப்ப" என நக்கீரர் பெருமானும் சொல்லியுள்ளார். ஆகவே இறைவனது அருள் வேண்டின் தருமம் மிகுந்த கரவு இல்லாத நல்ல நெஞ்சம் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மான் தன் இனத்தை தேடி வருதல் போல கடவுளும் எம்மை நோக்கி தாமே எழுந்தருளி வருவார்.

போயரன் தன்னைப் புகழ்வார் பெறுவது
நாயக னான்முடி செய்தது வேநல்கு
மாயகஞ் சூழ்ந்து வரவல்ல ராகிலும்
வேயன தோளிக்கு வேந்தொன்றுந் தானே.

இறைவனைச் சென்று அடைந்து புகழ்வார் பெற்றிட நாயகனான சிவன்; நான்கு வேதப்பொருளினையும் முடிவாகக் கொண்ட, உரை இறந்த சுகமாய நிலையைத்தாமே தந்தருளுவார். மாயாகாரியமாய உலகெங்கும் சூழ்ந்து வர வல்லமையாயவர்க்கும் மூங்கிலை ஒத்த தோளுடைய அம்மை அவளுக்கு வேந்தனாயவன் அவளுடன்ஒன்றியே உளன், எங்கு அலைந்து ஓடினாலும் சத்தியாய அவளுடன் ஒன்றியே நின்றான் சிவன். 42

(இதன் தொடர்ச்சி அடுத்த இதழில்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளொன்று வைத்து புறம்பு ஒன்று பேசுவார் உறவு கலவாமை வேண்டும்

எமது வாழ்வில் இப்பிறவிகிடைத்தது மிக அரிதான தொன்று. என்று உண்மை அறிந்த உத்தமர் மொழிந்துளர். இப்பிறவி முன்புள்ள புண்ணியப் பேற்றுல் தரப்பட்டது அது தரப்பட்ட காரணம் பெரியோர்களது துணிபு இறைவனை அடைதற்காக என்பதே. இந்த உண்மயே அந்த நாதாக்களுடைய மகத்துக்களுடைய நீள வருகின்ற கொள்கையாகும்.

இந்த நாதாக்கள் மகத்துக்கள் மகரிஷிகள் தாங்கள் ஒரு நெறிப்படி வாழ்ந்து ஒரு நல் நிலையை அடைந்து அதன் பின்னுக நமக்கும் பொருந்துமாறு சில வார்த்தைகளை மொழிந்துள்ளனர். அத்தகைய அவர்கள் எல்லாரும் ஏகமனதாக மொழிந்த ஒரே ஒரு நெறிதான் சன்மார்க்கம். அது தான் புனிதமும் நீதியும் நிறைந்த தொன்றுனவாழ்வு. அவர்களுடைய கொள்கைப்படி கடவுள் யாவரையும் அறிவார். எல்லா உயிரும் அவருடைய இருப்பிடம் என தாமே நேரில் கண்டு உரைத்தனர். அதனுலே மக்கள் இனிதுடன் சேமமுடன் வாழ மொழிந்த வாக்கியங்களில் ஒன்று உள்ளொன்று வைத்து புறம்பு ஒன்று பேசுவாரின் உறவு நீக்கல் நலம் என்றதாகும்.

உள்ளொன்றுவைத்து புறம்பு ஒன்று பேசல் வஞ்சனை அல்லது கரவு எனப்படும். எந்த ஒரு ஞானியும் தன் உள்ளத்து தோன்றுவதை அப்படியே மொழிவாரே ஒழிய ஒவ்வோர் நோக்கங்களை வைத்து பேசமாட்டார். இதனுலே தான் அடியார்களது சீலம் சிறப்புறுவது. இத்தகைய அடியார் கூட்டத்தையே பெரியோர் விரும்புவர்.

இந்த மகத்துக்கள் தாம் காணுத ஒன்றை கற்பனையாக எமக்கு எடுத்து மொழியவில்லை. ஆனுல் கற்பனையை கற்றதை மட்டும் எடுத்து மொழிபவர் தான் வித்துவான்கள் பண்டிதர்கள் பண்டித வித்துவான்கள் பண்டிதைகள் கவிஞர்கள் நாவலர்கள் பேராசிரியர்கள் ஓதுவா மூர்த்திகள் பண்டிதர்களில் மணிகள் மடாதிபதிகள் முதலிய முதல்வரிசையில் உள்ளவர்கள். அவர்கள் கற்றதை கற்பனையை மொழியும் போது அவற்றில் உண்மை இருக்கலாம். அல்லது இல்லாமல் போகலாம். அவர்கள் பேசும் போது அவர்களுடைய பேச்சு பாடல் வசீகரமாக இருக்கும். கேட்க இன்பமுகாக இருக்கும். அவர்களால் கல்வித்துறையில் பட்டம் பெற உத்தியோகம் பெற வாய்ப்புத் தருவதுமாக இருக்கும். உலகில் கேட்டு இன்புற நன்மையுமாகும். அவர்கள் தமது கற்றவைகளை அநுமானுதி இவற்றைக் கொண்டு மொழிவதும் வழக்கமாக உண்டு. இத்தகையோர்களால் உலகத்தில் பெரும மாற்றங்களை மாறுதல்களை தமது விருப்பப்படி செய்திடவும் முடியும். இந்த கையாக நிலமையை மாற்றும் போது இந்த நிலையில் தமது சித்தமும் மாறுபடும். உண்மை விழைவின் ாகமுடைய பெரியோர்கள் ஏடடே இதென்ன சங்கடம். இது வித்துவச் சேட்டை. இது எங்களுக்கு உதவாது என்று அதை நிராகரித்துள்ளனர். எங்கள் மாணிக்க வாசகர் இதை நன்கு உணர்ந்து சொல்கின்றுர்.

### ‘‘கற்றுரை யான் வேண்டேன் கற்பனவும் இனி அமையும்’’

என்றது கற்றவர் என்று இருப்பவரை யான் வேண்டேன் கறபனவும் இனிப் போதும் என்றதாக. அத்தகைய அவர் வாக்கியத்தால் கல்வியால்சிறந்துற்றவர் அவரிடத்து என்ன குறைபாடு ஏன் வேண்டாமென்றீர் என்று மாணிக்கவாசகரைக் கேட்க முடியாது? அவரே ஒரு கல்விமான் பெரும் புலவர். கோவை பாடியருளியவா. அவருக்கே அது வெறுப்பு விழைய வேண்டியது எக்காரணமோ எனக்கும் தெரியாது? நானும் அவரோடு அதைவிட்டிடுவம். நீங்கள் வேணுமானுல் அதைச் சிந்தித்து தெளிந்து கொள்ளுங்கள். கற்றவையும் இனிப்போதும் என்றமையால் அதுவும் ஆராச்சிக்குரியது. இன்னமும் கற்றுல் என்ன தவறு நேரும் என்றுல் அதற்கு பதில் எனக்கு தெரியாது நீங்களே சிந்தியுங்கள்.

முன்பு ஒரு நாள் நான் கூட்டுறவுப் பரிசோதகராகக் கடமை யாற்றும் பொழுது ஒருக்கால்எனக்கு இதன் சம்பளம் போதாது நான்ஒருக்கால் பண்டிதர் சோதனை எடுத்து படித்தால் நலம் என்று எண்ணி தொல்காப்பியம் சேனுவரையம் என்ற புத்தகத்தையும்; ஒரு புத்தகசாலையில் வாங்கிக் கொணடுவந்தேன். வந்த போது யோக சுவாமிகள் அவ்வழியால் வந்தது. என்கையில் புத்தகத்தைப் பார்த்தது. உடன்;

கேள்வி — உதென்ன காணும் உது
பதில் — சேனுவரையம்
கேள்வி — ஏன் உமக்கு
பதில் — சுவாமி படிக்கப் போறேன்

உடனே அருகு நின்றுர் யாவரையும் பார்த்து பெரும் சிரிப்புடன் இவர் ஒரு புத்தகப் பூச்சி. அவ்வளவுடன் சுவாமி தொடர்ந்து சென்றளியது. எனக்கோ திகைப்பும் பயமுமாய் வந்தது உடனே அந்த புத்தகசாலைக்கு திரும்பிச் சென்றேன். அவர்களை நோக்கி ஐயா இந்தப்புத்தகம் வேண்டாம் என்றேன் அவர்கட்கு வேதனை யாக இருந்தது. என்னைப்பார்த்து ஒய்நாங்கள் விற்கிறது திருப்பி எடுக்கிறதில்லை என்றுலும் இந்தாள் பாவம் நல்ல மனுசன் வேண்டிக் கொண்டு காசைக் கொடுங்கோ என்று புத்தகசாலை உரிமையாளரிடமிருந்து பதில் வந்தது.

எனக்கு மிகுந்த ஆநந்தம் திரும்பி என் வீடு நோக்கிச் சென்றேன். செல்லும்போது சுவாமி என்னை சங்கடமான ஒரு கடலில் நின்றும் மேல்தூக் உள்ளார் என்றே நினைந்து சென்றேன் இதைத்தான் மணிவாசகரும்,

### ‘‘கல்வி என்னும் பல் கடல் பிழைத்தும்’’

என மொழிந்து மாகும் என நினைக்கின்றேன்.

இராமலிங்க சுவாமிகள் இவ்வுலகில் திருவருட் பேற்றுடன்வந்த உத்தமர். அவருடைய பாடல் மிகு அற்புதமாவன. அவரது பாடல் களான அம்பலத்தரசே ஆடிய பாதம் இவைகள் உண்மையான தெய்வத்தன்மையின் ஊற்று. அதில் எட்டுணையும் சந்தேகமில்லை. அத்தகைய பெரியவர் முருகப் பெருமானிடத்து பாடல் மூலம் வேண்டுகின்றது ஒன்று. அது தான்உள்ளொன்று வைத்து புறம்பு ஒன்று பேசும் வஞ்சனை உடையாரது உறவினில் நான் போய்ச்சிக்குப் படாமல் என்னை நீ காப்பாற்ற வேண்டும் என்பதாக உள்ளது. அப்பாடலின் முதல்வரிஇதுவாகும்.

ஒருமையுடன் நினது திருவடி
நினைக்கின்றஉத்தமர்தம் உறவு
வேண்டும்
உள்ளொன்றுவைத்து புறம்பு
ஒன்று பேசுவார் உறவு கல
வாமை வேண்டும்

என்பதே உண்மையாகத் தெய்வம் ஒன்று இருக்கு அதை அடையவேண்டும் என எண்ணுவார்க்கு இது அருமந்தபொன் மொழியாகும்.

## தீபத்திற்கு ஓர் பெரியவரின் ஆசி

--0--

உ
சிவம்

புங்குடுதீவு
5—1—1978

தூயஅன்பு பொருந்திய
சகோதரர் அவர்கள்
திருவுள்ளத்துக்கு

முதலில் உங்கள் திருவுள்ளத்தை வணங்குகிறேன். திருமுறைகளை விட்டு நீங்காத திருமுறைகளில் வாசம் செய்கிற உங்கள் உள்ளம் என்னுல் வணங்கப்படும் தன்மையது. என் நாயகன் விநாயகன் எனக்கண்டு உங்கள் உள்ளத்தை வைத்த இடம் இருக்கிறதே அந்த இடம் பாசஞானம் செல்லா. பசு ஞானம் கரையும் இடம். அந்த இட சம்பந்தத்தால் இடர் கெடும். செய்வினைகள் கைகூடும். யாக்கை பெற்ற பயன் தலைப்படும். சிவ நேயத்திலும் அவன் பணியிலும் அவன் தொண்டிலும் நீங்கள் கொண்ட ஈடுபாடு அவன் அருள் பெற்றமையால் கிடைக்குது. சைவ சாஸ்திர பரிபாலனம் நடைபெறுமல் நின்ற காலம் இது. சைவத்தைச் சாரும் புண்ணியம் அருகிப் போன காலத்தில் உங்களை இந்தத் தெய்வப் பணிக்கு இழுத்து விட்டது. சாஸ்திர சம்மதமல்லாதவற்றை நீங்கள் கடிந்து விலக்கிக் காட்டும் உண்மையை நாடு ஏற்றுக் கொள்ள வேண்டும். நாடு சமய நிலையில் நிற்கும்நிலை; சாஸ்திர வரம்புகளை கடந்து வீண் ஆரவார நிலைக்கு வந்து விட்டது. உண்மை நிலையை விட்டு மக்கள் இறங்கி விட்டனர். ஆதலால் உங்கள் தெய்வப்பணி மலைபோல் இருக்கிறது.

உங்கள் தொண்டும் பணியும் மேன்மை கொள் சைவ நீதியும் சந்திர தீபத்தினின்றும் என்றும் நிலைத்துப் பிரகாசிக்கட்டும் எனப் பிரார்த்தித்து அம்மை அப்பனின் திருவடிகளை வழுத்துகிறேன்.

(ஒப்பம்)
இங்ஙனம்
கி. சரவணமுனர்

2—ம் வட்டாரம்
புங்குடுதீவு

# கைதவன் பெருமை

சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்து சோழ அரசர்களது அரசாட்சி முறையை மொழியும் போது

### ‘‘அருளின் வலியால் உலகாள்வார்’’

என்றும் பகையரசரை வெற்றி கொண்டு நாட்டில் நீதி நிலவச் செய்திட்ட போது அதனையும்

### ‘‘அருளின் வலியால் அடிப்படுத்து’,

என்ற இத்தகைய பதங்களே அவர் திருவாக்காக வரக்காண்கின்றேம்.

இப்படியாக மொழிந்து வரும் அவர் பாண்டி நாட்டை ஆண்ட ஓர் அரசன் நெடுமாறன் என்பவன் கூன் பாண்டியவன் எனவும் மொழியப் படுபவன் சமணரது சமயத்தை மெய் என்று கருதி அவர் சார்புற்று அந்த வஞ்சகரின் வஞ்சனைக்கு உடந்தையானுன். அதனுலே அவன் சமணருடைய வஞ்சனைக்கு இணங்கி பாண்டி நாட்டில் சென்றிருந்த திருஞானசம்பந்தப் பெருமான் இருந்த மடத்திற்கு தீ மூட்டவே உடைந்தையாக இருந்தவன். அப்படிச் சமணர் செய்திட அதனை திருஞான சம்பந்தப்பெருமான் உணர்ந்து அதற்கு பொறுப்பாக உடந்தையாக இருந்த பாண்டியனிடமே அந்த நெருப்பை வெப்பு நோயாக மாற்றி விடுகின்றுர்.

அந்த வெப்பு நோய் பாண்டியனைப் பற்றிக் கொள்கின்றது. வெப்ப நோயால்பதைப்புற்றுன். நடுங்கினுன். சோர்வுற்றுன். மயங்கினுன். அப்படியெலாம் அவன் பதைப்புற்று நடுங்கித் துன்புற அவனது உள்ளத் திருந்த கறுப்பான வஞ்சனைக் குரியன எரிந்து சாம்பலாகி உள்ளமும் மெல்ல மெல்ல புனிதம் அடைகின்றது. இந்த ஒரு நிலை கேள்வியுற்ற

(தொடர்ச்சி அடுத்த இதழில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐயாவும் அம்மாவும் அறிவாரோ சும்மாவை

இவ்வுலகம் இது தோன்றி மனிதன் தோன்றி கட்டுப்பாடு உணர்ந்து அரசாட்சி ஒன்று வேணும் என்று திடம் கொண்டு ஆளத்தொடங்கிய காலம்தொட்டு பலர் உலகின் நாடுகளில் அந்தத் தேசங்கட்கு தலைவியாக தலைவராக அரசியாக அரசராக வந்துள்ளார்கள். எத்தனையோ அரசிகள் அரசர்கள் இவ்வுலகில் பலதேசங்களை ஆண்டனர்.

இவர்களில் பாண்டிநாட்டில் எம் பெருமாட்டி உமையே மலையத்துவச பாண்டியன் மகளாக அவதரித்து தடாதகைப் பிராட்டி என்னும் நாமமுடன் பாண்டி நாட்டை ஆண்டாள் என்றும் எம்பெருமான் சிவன் அவளைத் திருமணம் செய்யும் பொருட்டாக சுந்தரபாண்டியனாக வந்தருளி எம் பெருமாட்டியைத் திருமணம் முடித்து பின்னர் அவர் ஆண்டார் என்றும் முருகக் கடவுள் உக்கிரப் பெரு வழுதியாக வந்து அவதரித்து ஆண்டார் என்றும் திருவிளையாடற் புராணம் கூறும்.

இக்காலத்தில் அரசர்கள் இல்லாத காலத்தில் நாட்டிற்கு தலைவராக பிரதம மந்திரியே பதவி வகிக்கின்றார். அப்படியான பதவிகளில் பல அம்மாக்களும் ஐயாக்களும் பதவி ஏற்று ஆண்டும் அநுபவித்தும் தமது பதவிக் காலங்களில் தம்மிடம் விசுவாசமுள்ளவரை ஈடேற்றியும் அல்லாது தம்மை எதிர்த்தாரை சுட்டு அடித்து நொருக்கிவித்து அங்கால் உலகம் போகச் செய்து; அங்காலை இருவரும் போற நாள் (அது தான் எப்பவோ தெரியாது) அவவை அல்லது அவரை அம்மா ஐயா நீங்களும் இங்கு வந்திட்டியளோ! சரி தொடர்ந்து அங்காலை போற தெண்டால் எங்களுக்கு அங்கை நீங்கள் செய்விச்சதற்கு ஏற்ற பழிக்கு தாறத்தை தந்திட்டு போங்கோ அம்மா ஐயா அல்லாட்டி முடியாது என்று அவர்கள் தங்களை அங்கையும் இடைமறித்து கேட்பிக்க வைத்தும் செய்து; ஆண்டு கொண்டே இருந்தார்கள் இருக்கிறார்கள் இருக்கவும் போகிறார்கள்.

இப்படியான பல தலைவர்கள் தலைவிகள் எங்கள் இலங்கையிலும் வந்துள்ளனர். இவர்களில் இப்போது ஒரு ஐயா வேலை தேடி உத்தியோகம் கிடைக்காதவர்களுக்கு சும்மா இருக்க ஐம்பது ரூபா மாசம் கொடுக்கப் போறாராம் என்பது கேட்டதும் இதென்னடா இது முன் ஒரு ஐயா சும்மா இருக்க எல்லாருக்கும் ஒருறுத்தல் அரிசி ஒவ்வொரு கிழமையும் கொடுத்தார். இந்த ஐயா இப்ப சும்மா இருக்க் காசும் ஐம்பது ரூபா மாசம் கொடுக்கப் போறாராம் என்பது கேட்டு வியப்படைந்தேன். ஏனென்றால் எனக்கும் இவருடைய திட்டம் ஆறுதல் தரப்போகின்றது. எனது குடும்பத்திலும் பல இளைஞர்கள் படித்து வேலை தேடி அலுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கும் ஐம்பது ரூபா மாதம் வரப்போகிறது என்றால் ஆறுதல் தானே! என்னை எல்லாரும் என் மக்களுக்கும் உத்தியோகம் தேடிக்கொடுக்க வில்லை என்று நச்சரித்துக் கொண்டே போகின்றனர். நானும் என் செய்யலாம் பலரிடமும் கேட்டுப்பார்த்தேன். ஒருவரும் அதற்கு இசைய வில்லை. என்னை மற்றையோர் என்ன மாதிரி நினைக்கின்றார் என்பதை அவர்க்கு விளங்கிற அளவிற்கு மேலாக எனக்கு தெரியும். ஆதலால் பிறகு நான் இதைப் பற்றி பலரிடமும் கேட்பதை விட்டுட்டன். நான் கந்தபுராணம் பெரியபுராணம் இவற்றிற்கு மக்களும் படித்து இன்புறும் பொருட்டு உரை எழுதி அச்சிட்டு வெளியிட்ட பின்பு உலகம்போற போக்கில் உண்மையாக நான் போக விரும்பவில்லை. என்னை நான் சில வேளை மிகக்கடுமையாக நொந்து கொள்வதும் உண்டு. எப்படி எனில் ஐயோ நீ லண்டன் மற்றிக் சோதனை சித்தி எய்தியிருந்தால் நல்ல தொரு உத்தியோகம் கிடைத்திருக்கும். அதைக் கவனமாகப்பார்த்தால் எவ்வளவு நல்லது எவ்வளவு சிறப்புடன் வாழ்ந்திருப்பாய் இப்போது விடவேண்டி வந்ததே பார் உன்னுடன் வேலை பார்த்தார் எல்லாரும் காரில் பறக்கிறாரே. நீ ஒரு ஓட்சைச் சயிக்கிளில் ஓடிக் கொண்டு கந்த புராணத்தை பெரிய புராணத்தை அச்சிட்டு சுமந்து சென்று கல்லூரி அதிபர்கள் முன்பு போய் அதை விற்பதற்காகக் காத்திருந்து கவலைப்படுகிறாயே. இப்படி எல்லாம் ஏன் இந்த வேலை, இன்றோடு இதை விட்டிடன். இதுவேண்டாம் உனது குடும்ப அலுவலை மற்றையோர் மாதிரி சீராகப்பாரேன் எங்கேயிலும் குத்தகைக்காதல் காணி எடுத்து கமம் செய்யன். அல்லது யாபாரம் செய்யன். என்றால் அது முடிகின்றதாக வருவதில்லை. இரவெல்லாம் நித்திரையுமிலாது இதை நினைந்து நோவது. விடிந்தால் கந்த புராணமும் பெரிய புராணமும் சந்திர தீபப் பத்திரிகை முயற்சியும் தான்! நான் என்ன செய்யலாம். என்னையே திருத்த முடியாது இருக்கின்றேன்.

## மாணிக்கவாசகர் தான் எனக்கு ஒரு ஆறுதல்

மாணிக்கவாசகருடைய வரலாறு இரு புராணங்களில் பேசப்படுகிறது. அவையாவன ஒன்று திருவிளையாடற் புராணம் மற்றது திருவாதவூரடிகள் புராணம். இரண்டும் அற்புதமானது. வடிவாகச் சொல்லியிருக்கிறது. திருவாதவூரடிகள் புராணத்து கடவுள் மாமுனிவா நான் பயன் சொல்வது போல்கொஞ்சம் விளக்கமாகச்சொல்கின்றார். அவர் சொல்வதைப் பாருங்கள்.

மாணிக்கவாசகருடைய நற்பண்பு கல்வித்தகமை நீதிவிளக்கம் அறிவு ஆற்றல் இவையாவும் உணர்ந்த பாண்டிய அரசன் அவரை அழைத்து தனது ஆட்சிப் பொறுப்பை ஒப்படைத்து பிரதம மந்திரியாக நாட்டை ஆளும் படி விட்ட பொழுது; இவரை அவன் குதிரை வாங்கும் படி பொன் கொடுத்து விடுகின்றான். விடப்பட்ட இவர் பொன்னையும் கொண்டு உண்மையில் குதிரைவாங்கும் படி சென்றார்க்கு திருப்பெருந்துறையில் தமது குருமணியாயசிவனை அடைந்து தனது ஒன்று என்ற எல்லாம் இழந்து சும்மா இருக்கும் சுகம் கைகூடிடப் பெற்றார். அதன் பரிசாக அந்நிலையைத் தந்த பெருமானுக்கு தான் கைமாறு செய்ய முடியாத நிலையால் தன்னிடத்துள்ள எல்லாப் பொருளையும் கொடுத்தது மன்றி பாண்டிய அரசன் குதிரைவாங்க கொடுத்த பொருளையும் குருவாக வந்தருளிய பெருமானுக்கே கொடுத்திட்டார். ஏன் கொடுத்தார் என்று நீங்கள் என்னைக் கேட்காதீர். சட்டப்படி சரியோ என்றெல்லாம் கேட்காதீர். ஏனென்றால் அவருடைய விருப்பம் அது. அவர் குருமணியைத் தரிசித்து அவர் அருளால் பெற்ற சும்மாவின் இன்பம் அத்துணைபெரிது போலும்.

அது மட்டோ அவர் பின்னர் அந்த இன்பத்தில் மூழ்கி ஐய்யோ இதுதானே இதன் பெருமை! நான் இதையும் அடைதற்கு உரியவனோ! என்னவாக இருந்தேன்! என் நினைந்து வாழ்ந்தேன்! இத்தகையநாய்க்கா இதுதரப்பட்டது. நான் என்செய்தன்! எத்தனை வம்புக்கு காமலீலைக்கு கண்ட பொழுது போக்கிற்கு கொலைக்கு! உல்லாசப் பிரயாணத்திற் கெல்லாம் ஓம் என்று இயைந்து இருந்த என்று இந்த உடம்புடனா இது பெறுவது! ஐயோ இந்த பாதகம் செய்த உடம்பை அறுக்கட்டோ நெருப்பிலே குதிக்கட்டோ ஐயோ இந்த பெரும் இன்பத்தை நான்பெற கூட்டி வைத்த திருவருளை அறியேனே!. என் செல்வமே! சிவனே நீ எங்குற்றாய்ஐயா என்றெல்லாம் போற்றியும் புகழ்ந்தும் புரண்டும் அழுது அந்தரப்பட்டார் என்று அப்புராணங்களில் சொல்கின்றார். மாணிக்கவாசகரும் தமது திருவாசகத்தில் அப்படித்தான் அந்தக்குருமணி தன்னைச் செய்ததை ''தரியேன் நாயேன் தான் என்னைச் செய்தது தெரியேன் ஆவா செத்தேன் அடியேன்'' என்று இது போல இன்னமும் பலசொல்கின்றார்.

யோக சுவாமியும் ஒரு நாள் என்னை நோக்கி எடே நீ போய் ஒன்றும் நினையாமல் சும்மா இருந்து பழகிப்பார் என்றது. சொல்லிப் போட்டு சிரிச்சுது. ஏனென்றால் அதற்குத் தெரியும் நாய் வாலை நிமிர்த்திறது வலு பஞ்சி. நிமிர்த்திப் போட்டால் கெட்டித்தனம்தான். அதுதான் மணிவாசகரும் தனது பல பாடலிலும் தன்னை நாய்க்கு ஒப்பிடுகின்றார். ஓரிடத்து சொல்கின்றார் ''நாய் சிவிகை ஏற்றுவித்த என்தாதை தாதைக்கும் எம் அனைக்கும் தம் பெருமான் குன்றாதசெல்வன்'' என்ற போது அவர் தான்பெற்ற இன்பம் எத்துணை பெரிது.

சரி இதெல்லாம் நடந்தது. குதிரை வாங்க இவருடன கூடிப்போன மற்றவருடைய நிலை எப்படி? அவர்கள் பார்த்தார் இதென்னடா சங்கடம் இந்தாள் இவ்வளவு பொறுப் புணர்ச்சியுடன் நடந்திட வேண்டியவர்; அந்த சந்நியாசிகளிடத்து அவர்கள் ஏதோ வசியம் செய்திட முழுப் பொருளையுமா கொடுப்பது? எவ்வளவுபழி. நாங்கள் இங்கு இனி நிற்கக் கூடாது. நின்றால் எமக்கும் ஆபத்து! நாங்கள் ஒருக்கால் அவரிட்டைப் போய்சொல்லுவம் என்று தங்கள் மந்திரியார் மாணிக்கவாசகரிடத்துச் சென்று ''ஐயா குதிரைவாங்க வேணும் அந்தக் காசையும் அவையளிட்டை வாங்கிக் கொண்டு வாருங்கோ நாங்கள் போகவேணும்! அரசகடமை அன்றே முதற் கடமை அதைச் செய்வோம்.'' என்றஉடன் மாணிக்கவாசகர் அவர்களைக்கேட்ட ஒரு கேள்வி ''நீங்கள் ஆர்'' எனக்கு என்ன கடமையிருக்கு அப்பால்போங்கள்.

அவர்கள் விறைச்சுப் போனார்கள் இதென்னடா இது இவர் எங்களோடு இவ்வளவு நாள் பழகியவர். ஒழுங்காக நாம்எத்தனைகருமம் புரிந்தவர். அப்படியான இவர்எங்களை நோக்கி நீங்கள் ஆர் என்று கேட்டாரே! அந்த சந்நியாசிகள் இவர் பொருளை ஏமாற்றிப் பறிக்க ஏதோ விசயம் செய்து போட்டார். இவரொடு நாம் கதைத்து இனி வேலை இல்லை. வாருங்கோ நாம் எல்லாரும் திரும்புவம் என்று திரும்புகிறார்கள். இவர்கள் திருமபியதை எதற்கு நாம் ஒப்பிடலாம் என்றால் இலங்கை பாராளுமன்றத்திற்கு எம் தமிழ் பிரமுகர்கள் செல்லும்போது அல்லற் படும் தமிழ் மக்களாய உங்களுக்கு நீங்கள் உங்கள் அடிமைத் தன்மை நீங்க வசதி எல்லாம் செய்து தருவோம். நீங்களே உங்களை ஆளவும் வைப்போம் என்று முழங்கி அணிதிரண்டு ஆர்ப்பரித்து எவ்வளவு மேலதி வாக்கு என்ற போட்டியிலே வியந்து அங்கு பேரவைக்கு போன பின் போன காரியம் வாய்க்காது வெவ்வேறு வழியில் திரும்பி ஒருவர் ஒருவரின்பிழைசாட்டிக் கொண்டு எங்கள் முன் வருவது போல் இவர்களும் மாணிக்கவாசகரை சிவனடியார் கூட்டத்து தனியே விட்டுப்பிரிந்தனர்.

அவ்வகை அவர் பிரிந்து சென்று பாண்டிய அரசனைச் சேர்ந்த பிற்பாடு மாணிக்க வாசகரது நிலை பற்றி பாண்டிய அரசனிடம் முறைப்படுகிறார்கள். பாண்டிய அரசனும் அவர் சொன்னதை அப்படியே நம்பிக் கொண்டான்.

அவனது நினைப்பும் மாணிக்கவசகர் சந்நியாசிகளிடம் சிக்குப் பட்டுக் கொண்டார் என்பதே எண்ணிக் கொண்டான். மேல்கொண்டு அவர் என்ன பெற்றார் என்பதை, அவனால் உணர முடியவில்லை. உணரவேண்டியதுமில்லை. ஏன் என்றால் அவனுக்குத் தேள்வை அவன் அரசாட்சி செவ்வனே நடைபெறல் வேண்டும். அதில் தவறு ஏற்படும் போது தண்டனை புரிய வேண்டும். இது ஒன்றேயன்றி வேறு அவனால் அவன் பக்குவ நிலைக்கேற்ப முடியாத படியால் அவன் மாணிக்க வாசகரை தண்டிக்கின்றான்; அவரை அழைப்பித்து கொடிய வெயிலில் நிறுத்தி வைத்து அவரை இறைவன் அடியாரிடம் கொடுத்த பொருளைதருமாறு வதைக்கின்றான்.

அவர் என் செய்வார் ஆண்டருளிய இறைவன் அருள் வழி இருப்ப தூண்டு சோதி அவர்க்காக வேண்டி நரியைக் குதிரையாக்கி பாண்டியனுக்கு விற்கின்றார். சிவன் குதிரைகளை மாணிக்க வாசகர்க்காக கொண்டு வந்த பொழுது அவர் அற்புதம் கண்டு பாண்டிய அரசன் மாணிக்க வாசகரை சிறை நீக்கி மகிழ்விக்கின்றான். அவன் அப்படிச் செய்ய அன்றிரவு வந்த மாயக் குதிரை திரும்ப நரியாகிறது. பாண்டிய அரசன் அது கண்டு அவன் கொண்ட கோபத்திற்கு அளவே இல்லை. அதனாலே மாணிக்கவாசகரை கொடிய வெய்யிலில் பாடாக மீண்டும் கிடத்தி; தான் கொடுத்த பொருளைக் கேட்பிக்கின்றான். அவரால் தான் என்ன செய்யமுடியும்?: அவர்துயர் நீக்கிட பாண்டி நாட்டில் வைகையாற்றைப் பெருகும் படி செய்விக்கின்றார்.

ஆறு பெருகக் கண்ட அரசன் பல வகையாலும் அதை நிற்பாட்ட முயன்றான். முடியவில்லை மாணிக்கவாசகரும் இவனுக்காகவே வருந்தினார்போலும். இவனுக்காக வெயிலில் கிடந்து வருந்திட என்ன ஆச்சரியம் பாண்டியன் இவர் மீது கொண்ட கோபம் தணிந்து இவர் ஒரு பெரியவர்; இவரைத் தண்டித்தது தவறே என்பது உணர்வில் வெளியாகிறது. ஆற்றுப் பெருக்கு அடங்காததால் கவலைபெருகியது.

அழல் போலும் கோப நிலையான பாண்டிய அரசன் சிந்தை அது எல்லாம் தன் உள்ளத்து கவலை மிகுதியால் அழிந்து தனது மனதில் எண்ணிய படி பலநாள் தன் மீது அளவு கடந்த அன்பு வைத்திருந்த மாணிக்கவாசகரை சிறை நீக்கம் செய்வித்து மகிழ்வுசெய்கின்றான். செய்கின்றதும் வைகையாறு தனது பெருக்கினைக்குறைக்கின்றது; அதன் பின்னாக மேலும் வைகையாறு பெருகாதிருக்கும் படி வைகையாற்றங் கரையை பாண்டிய மன்னன் ஊர்மக்களைக் கொண்டு அடைப்பிக்கின்றான்; வைகையாற்றின் நீண்ட கரையை சமமாகப் பங்கிட் அவ்வூர் வாழும் ஒவ்வொருகுடிக்கும் ஒவ்வோர்பங்குகொடுத்து அடைப்பிக்கு மாறு கட்டளை செய்கின்றான்.

அவன் கட்டளைப் படி எல்லாக்குடிகளும் தத்தமக்குரிய பங்கைஅடைக்கின்றனர்.

அக்காலம் அங்கு வாழ்ந்த செவ்விய மனமுடைய ஓர் கிழவி வஞ்சனை இல்லாதவள். தன் போல் பிறரையும் நேசிப்பவள். பிட்டு அவித்து விற்று சீவனம் செய்பவள். அவள் தனித்த ஒரு குடியாக உள்ளவள். ஆனமையால் அவளுக்கும் ஒரு பங்கு கொடுபடுகிறறது. அப்படி நேர்ந்துவிட பாவம் அவள் என் செய்வாள் யாரும் அவளுக்குத் துணை இல்லை யாருமே அவளை நம்பி வேலை செய்ய மறுத்தனர். காரணம் அவர்கள் எல்லாருக்கும் தெரியும் இந்த ஆச்சிக்கு வேலை செய்தால் காசு வேண்ட முடியாது. ஆதலால் ஒருவரும் அவளுக்காக வேலை செய்ய முன்வரவில்லை. அந்த அம்மையும் பலரையும் கெஞ்சிப்பார்த்

(தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்திர தீபம்

இதழ் 1 | பிங்களவருஷம் மார்சழி மாதம் 15 வெள்ளிக்கிழமை | சுடர் 6


# பாழ்போன ரோட்டில் பறக்குது ஐயா கார் பாவியேன் சயிக்கிலோ பாய்ந்து துள்ளி விழுகுது

எமது யாழ்ப்பாணப் பகுதியில் பெரும் பாலும் எந்த ரோட்டை யோ நெடுஞ்சாலையை யோ இன்று நாம் நோக்கினல் 1 முழத்திற்கு 1½ முழ ஆழத்தில் ஒவ்வொரு இடங்கும் பள்ளமுயாகவே இருக்கின்றது.

பெரும் பாலும் தமிழர்களாய எங்கள் நாளாந்த இந்த வகையான குறைபாடுகளை கவனிப்பார் ஒருவரும் இல்லை. இந்த தமிழ்ப் பகுதிகளில் மக்கள் நலன்களை அவதானித்து வேண்டியது செய்திடும் ஆற்றல் வாய்ந்த நீதியுடைய கவனிப்பாளர் ஒருவருமே இல்லை என்ற நிலைதான் ஏற்பட்டு விட்டது போலும்.

பிரித்தானியர் எங்களை ஆளும் போது நாம் எல்லாம் அடிமைகள் என்று கூறி அவர்கள் இவர்களைச் சுதந்திரம் கொடுத்து தன் பாட்டில் ஆளவிட்டுவம் என்று இந்த நாட்டை நீங்கி போன பின்பு அதாவது 1946ல் என நினைக்கின்றேன். எமது யாழ்ப்பாண் தெருக்கள் நிலை கொஞ்சம் கொஞ்சமாகத் தேய்ந்துதேய்ந்து வந்து இன்றைக்கு அத்தெருக்கள் மனிதர் நடந்தோ அல்லது சயிக்கிலிலோ போக முடியாத நிலை வந்துள்ளது. இதனைக் கண்ணல் காணும் பார்வை பெற்ற எல்லாருக்கும் தெரியும்.

ஆனல் இத்தெருக்களில் கொடியும் கட்டி வேகமுடன் பறந்திடும் எங்கள் ஐயாமாற்றைகாரோ சொல்லொணுத வேகத்தில் பறக்குது ஏன் என்று நாம் சிந்தித்தால் அவர்களுக்கு கார் சில்லு உடைந்தால் என்ன ரயர் போனல் என்ன அவர்கட்கு அரசாங்கமும் கார் கொடுக்கும். அல்லாது அவர்கள் கார் இல்லாத போது அவர்களுக்கு பொது மக்களிடம் காசும் திரட்டிட இரண்டு தம்பியும் பற்றுடைய வராகிய ஐயாவும் அம்மாவும் மேடையில் இரண்டு தரம் தட்டிப் பேசினல் கார் தன் பாட்டில் ஒன்று வரும். ஆதலால் அவர்களுக்கு தங்கள் காரைப் பற்றிய அக்கறை தேள்வையில்லைப் போலும். அடுத்து எங்களுடையதெரு எப்படிப் போனல் என்ன அது அவை சும்மா இருக்கினம் என்ன வேலை அவையாள் ஒரு கடகம் மக்கி கொட்டி தங்கள் தங்கள்படலையில் முன்புள்ள ரோட்டை கவனித்து பாண்டிய அரசன் வைகை ஆற்றங்கரையை அடைப்பிச்ச மாதிரி தமிழ் பிரதேசங்களில் இருப்போர் தத்தமது தெருக்களைத் தாங்களே கவனித்தால் என்ன? இந்த ரோட்டு போடுறது இது எல்லாம் சின்ன விசயம் நாங்கள் போனது பெரிய விசயத்திற்கு என்றும் இருக்கலாம்.

இந்த வகையாய எங்கள் தெருக்கள் இன்னும் எத்தனை வருடக் கணக்காக இருக்குமோ தெரியாது. இந்த தெருக்களின் நிலையில் 1946 ம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலையை நோக்குவோமேயாகஇருந்தால் உண்மையாக அந்தத் தெருவில் எங்காகிலும் ஒரு சிறுகிடங்குதானும் இராது. அப்படி சிறுகிடங்கு வர வர மாதம்தோறும் அதற்கு பொறுப்பாயிருக்கின்றவர் அதை அவதானித்து அதற்கு வேண்டியதைச் செய்து கொண்டே இருப்பார்கள். அது இல்லாத போது அப்பகுதி நெடுஞ்சாலைப் பொறியியலாளருக்கு ஒரு கடிதம் காணும். உடன் அந்த பகுதி கவனிக்கப்பட்டு சீராக்கப் படும்.

சாலைகளை வீதிகளை சுத்தமாக வைத்திருப்பது ஒரு தருமம் என்று வேத வழி வந்த நூல்கள் சொல்லும. கடு வழியில் முள்ளிட்டேனே வழிமறித்து துயர் புரிந்தேனே என்றும்; பிற நூல்கள் வாயிலாக வீதிகளையும் அதனைப் போக்கு வரத்திற்கு இடைஞ்சல் செய்யாத வாறு வைத்திருக்கவேண்டிய அவசியத்தையும் பெரும்பாலான தரும நூல்கள் சொல்லியுள்ளன. அப்படியான ஒரு சிறந்த வீதி பேணுகின்ற தொண்டை எமது நாட்டில் அக்கறைக்குறைவாக தெருக்கள் விடபட்டிருப்பது வருந்தத்தக்கதே! இதற்கு யாரை நாங்கள் பெறுப்பாக்க முடியும்? வள்ளுவர் சொன்ன மாதிரி நம்மையே நாம் நொந்து கொண்டு; வேதனைப் படுவதன்றிவேறென்? 1946ம் ஆண்டிலிருந்து இப்படியான ஓர் சீர்குலைந்த நிலையில் எம் வாழ்வு அமைய வேண்டியதற்கு நாம் வேறு என் செய்யலாம்?

இன்றைய நிலையில் இதைப் பேசினலோ எழுதினலோ என்ன நமக்கு நேருமோ என்ற அச்சம்மபெரும் பாலும் வருகிறது.

ஒன்றில் சப்பாத்து கவசமிட்டகாலோ துவக்கோ வாளோ எது தெரியாது எங்களைப் பதம் பார்க்கப் போகின்றது என்பதே நினைத்து நடுங்க வேண்டிய நிலையும் வந்தடைந்து கொண்டது.

மனிதன் நன்மையை உணர வேண்டும். எதை நாம் செய்ய வேண்டும் என்பதை நல் நெஞ்சுடன் சிந்திக்க வேண்டும். பிறரைக் குறை கூறுவது அது கோழமை. தாம் ஒரு கடமையை ஏற்றுக் கொண்டால் அந்தக் கடமையை சரி வர உணர்ந்து நீதியுடன் கையாண்டு வரக் கூடியவனல் தான் முடியும் எந்த ஒரு நிலையையும சாதித்திடற்கு அதைவிடுத்து அந்த ஒருதன்மையிலாது வெளியில் ஒன்று பேசி. இன்னென்று செய்வார் களால் இந்த உலகில் ஏது ஒரு நன்மையையும் சாதித்திட முடியாது.

இதற்கு சான்றாக பெரிய புராணத்து சேக்கிழார் ஒரு வரலாறு தருகிறர். அதுதான் வருமாறு சிறுத்தொண்டர் என பின்னர் அழக்கப்பட்ட பரஞ்சோதியார் அக்காலத்து ஆண்ட சோழ அரசனுடைய சேனதிபதியார். அவர் இருக்கும் காலத்தில் வடக்கில் உள்ள யாரோ ஒரு அரசர் சோழனை இகழ்ந்தார் எனக் கேள்வியுற்ற சோழ அரசன் உடனே பரஞ்சோதியாரைச் சேனையுடன், வடநாட்டை முற்றுகையிட்டு அடிபணிய வைத்து வருமாறு விடுக்கின்றன். சோழஅரசனுடைய சேனதிபதிகளில் பரஞ்சோதியார் அவனுடைய யானைப் படைகளுக்கு தலைவர். அவர் அந்தநாட்டை முற்றுகையிட்டு வெற்றி பூண்டு திரும்புகின்றர். அந்த நாட்டை வெற்றிகண்டு திரும்பும் அவரது யானைப் படையே அந்த வெற்றியை ஈட்டிக் கொடுத்தது. அதனல் அப்படையைச் செலுத்திய அற்புதத்தை பலர் வியந்து பாராட்டி அரசனிடம் சொல்ல அவனும் அது கேட்டு பரஞ்சோதி யார்க்கு இத்துணை அற்புதமான செயல் எவ்வணம் கை கூடியது என் ஆச்சரியப்படுகின்றன்!

அப்போது ஓர் மந்திரி அரசனை நோக்கி சொல்வான் அரசே! அவருடைய தலைமைப் பாட்டில் போன எந்த ஒரு போரிலும் வெற்றி கண்டு திருபக் கூடிய ஓர் திரு உண்டு அதையாவரும் தெளிந்து கொள்ளார்கள் என்றன்.

அது கேட்ட அரசன் மிகுவியப்புடன் மந்திரியை நோக்கி அது என்ன சிறப்பு அவரிடம் உண்டு சொல்லும் என்கின்றன்.

மந்திரி சொல்வான் அரசே அவர் நீதியுடைவர் அஃதன்றி உண்மை நிறைந்த ஓர்சிவபத்தர். ஆதலால் அவர் மீது எதிரிகள் செலுத்தும் எல்லாப் படையுமே அவர் முன் எதிர் நிற்காது. ஆகவே அவர் போரில் வெற்றியுடன் திரும்பும் காரணம் அது தான் என்கின்றன்.

அரசன் கேட்டவுடன் பரவசமானன். அப்பாடா! அத்தகைய பெரியோரையா எனது படைத் தலைவனக வைத்திருந்தேன் என எழுந்து அவர் முன் வந்து அவரை வணங்கி பரஞ்சோதியாரே உம்முடைய பெருநிலையை யான் உணராது இச் செயலில் உம்மை நான் எனது ஆளாகப் பாவித்தேன். ஆகையால் என் பிழையினைப் பொறுத்து உம்முடைய சிவதொண்டை மேலோங்கப் பேணுவீர் என்ற போது பரஞ்சோதியார் சொன்ன பதில் இதுவாகும். அரசே சேனதிபதி உரிமை எனது கடமை அக்கடமையைச் சரிவரச் செய்தலும் வழிபாடே ஆதலால் அதில்தவறென்றும் இல்லை என மொழிகின்றர் இதற்கு மேலாக நாம் சொல்வதற்கில்லை. நீங்கள் இனி உணர்ந்து கொள்ளுங்கள்.

அரசாட்சியில் பெறுப்பேற்ற தமது கடமையைப் பொறுப்புடன் செய்தல் அதுவே தலையாய தொண்டு அவைவிடுத்து மேடை மட்டும் நின்று வீம்பும் வீரமும் பேசுவதுவீணனசெயல்.

## தீபத்திற்கு ஓர் தேவ ஆசி

உ

சிவமயம்

சிவஸ்ரீ ஐ கைலாசநாதக் குருக்கள்
பிரதம குரு,
ஸ்ரீநாகபூஷிணியம்மை தேவஸ்
தானம் நயினதீவு
இந்துமத பீடாதிபதி,
பிரதிஷ்டாபூஷணம்,
பிரதிஷ்டாதிலகம்,
(காஞ்சி பெரியார்)
இந்து கலாச்சார ஆலோசகர்.

உ.

பேரன்புமிக்க புராண உரையாசிரியர் ஸ்ரீமான் வை. நல்லையா அவர்கட்கு.

ஆசி தங்களின் அருந்தொண்டின் பெரும் பயனகிய சந்திர தீபம் கிடைத்தது. வேதாகம சாரங்களை அடக்கி சித்தாந்த முறைப்படி தமிழ் வேதமாகிய தேவாராதிகளை எடுத்துக் கூறி இக்காலத்திற்கு ஏற்றவாறு காரண காரியங்கட்கமைய பலவிசயங்களையும் எல்லோரும் அறியக் கூடிய முறையில் குழிர்ச்சியான தீபமாய் மக்களின் மனசைக் கவர்ந்து நல்வழிப்படுத்துவதாகிய தொண்டு பெருந் தொண்டாகும். முனிவர் யோகர் சுவாமி அவர்களின் ஆசி தொழிற் படுகின்றது என்பது போற்றுதற்குரியது.

இக்காலச் சூழ்நிலையில் தாங்கள் இப்படியான தொண்டு செய்வதே தவப்பயன் எனலாம்.

வாழ்க சிவப்பணி- சுபம்

ஐ. கைலாசநாதக்குருக்கள்- 7-1-78

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அம்மாவும்..- . .

7—ம் பக்கத் தொடர்ச்சி

னாள். எல்லாரும் ஏதோ சொல்லி மறுத்தனர். ஆனல் அரச சேவகரோ விட்ட பாடில்லே. கிழவியை வந்துவெருட்டி பயமுறுத்தி கரை அடைக்கும் படி வற்புறுத்து கின்றனர். கொடுமையும் படுத்து கின்றனர். பாவம் என் செய்வாள் அவள் நடுக்கமுடன் தான் வழிபடும் பெருமானது கோவில் முன்பு சென்றுஅவரை வழிபட்டு தன் கவலே எல்லாம் முறைப்படுகின்ருள்.

''என் ஐயனே விடிந்ததும் அதிகாலேயில் எழுநது சால்கை சுத்தி செய்து எனது அடுப்பங்கரை சென்று நீஇதையெல்லாம் பார்க்கின்ருய் என உன்னேயே நினேந்து நெருப்பு மூட்டிஅடுப்பில்பானே வைத்து பிட்டு மாவை அதில் இட்டு பிட்டவித்து விற்பேன். அதில் ஒருக்காலும் வஞ்சனேயோ பழுதோ செய்ததில்லே. அப்படி யான பரம ஏழையான எனக்கும் இந்த ஒருசங்கடம் வந்ததே! ஆருடன் நான் இதைச் சொல்வேன் என்னே உடையவன் நீ ஒருவனே! என்க்கு உற்ருருமில்லே பெற்ருருமில்லே என்னேச் சொல்லப் போனல் பேய் ஒன்றுடன் நான் நின்ருல் அது பேய் நான் வேறு என்று சொல்ல முடியாது. இரண்டும் ஒன்ருகவே கருதும்படியானேன். உலகம் என்னே நோக்கி மதிப்பதும் அவ்வாறே. ஆகையால் எனக்கு உலகமக்களால் யாதும் உதவியின்றி நிற்பேன். இவ்வகையாற்றங்கரையில் உள்ள எனது பங்கும் அடைபட்டிட வேண்டு மென்று அழுதழுது விண்ணப்பிக்கும் அந்த அன்னேக்கு தாமே கூலியாளாகும் படி துணிந்தனர் தேவதேவர்.

## சிவன் எனும் எமது கூலியாளன்

துணிவுற்ற கடவுள் தனது ஆடையும் கிழிந்த சீலேயாகி கூலியாளன் போல் வடிவு கொண்டு கூடையும் தலே மீது கவிழ்த்து மண்வெட்டியும் தோள் மேல் கொண்டு வழிபட்டு நின்ற அன்னே காணும்படி முன் வந்து தன்னே கூலியாளாகக் கொள்ளலாமோ எனக் கேட்டருளினர்.

அன்னேயும் மகிழ்வுடன் அவரை நோக்கி தம்பி நன்று எனக்கு அரசனல் தரப்பட்ட கோலறைப்பங்கு உளது. அதை அடைத்திட உன்னல் முடியுமோ என்றனள். எம் பெருமாட்டியின் வார்த்தை கேட்ட கூலியாளன் அவளே நோக்கி அம்மா செய்வேன். ஆனல் முன்னுகக் கூலி தருவாயோ? என்கின்ருன்.

அம்மை சொல்வாள் ஐயனே! முன்னுகக் கூலி தர என்னிடம் காசு இல்லே நல்ல இனிய பிட்டு அவித்து வைத்துள்ளேன். அவை நீ வேண்டிய மட்டும் தருவேன். அதனே உண்டு இப்போது எனது பங்கை அடை. அல்லாதிருந்தால் நீ சென்று மாலேவா அப்பிட்டினே விற்று காசு தேடி உனக்கு தருவேன் என்ருள்

எமது கூலியாளன் கேட்டலும் தாயே நான் பெரும் பசி உடையேன்: இனிய பிட்டு முன்னுகத் தருவையாகில் அதை உண்டு அந்த உரத்தால் கோலறைப் பங்கை இன்றே அடைப்பேன் என்கின்ருன்.

அன்னே சம்மதிக்கின்ருள் கூலியாளனே தனது சிறு குடிசைக்கு அழைத்துச் செல்கின்ருள். தனது பானேயின் மேலாக கரியதுணியில் இட்டு அவித்திருந்த பிட்டை தமது கையால் விருப்பமுடன் அள்ளி என் மகனே; இதை நீ விருப்பமுடன் உண்பாய் எனக் கொடுக்கின்ருள்.

எம் கூலியாளனும் தமது கந்தைத் துணியில் ஒரு புறம் நிறைய ஏற்று திருவாயில் இட்டு உண்டருளி பின்னர் அன்னேயை நோக்கி அம்மா இனிய பிட்டு இது. இன்னமும் உண்டால் நல்லது என்று அங்கிருந்த பிட்டினில் பின்னரும் அம்மையிடம் கேட்டுவாங்கிதமதுகந்தை சிலேயில் ஓர் புறத்து நிரப்பி முடிந்து சொண்டு தாயே நினது கோலறைப் பங்கு எங்கு காட்டுவாய் என்றனர்.

அம்மையும் சென்று காட்ட அவர் அக்கரையில் சென்றுஅவள் கோலறைப்பங்கை அடைக்கமுற்படுகின்ருர். அது வேளே அவர் அப்பங்கை உற்சாகமுடன் அடைப்பதற்குப் பதிலாக விளேயாட்டாகவே அதனேச் செய்கின்ருர்.

ஒருக்கால் தனது கூடை நிரம்ப மண்ணே வெட்டிப்போடுவார். இது கனத்துப் போச்சு என்று அதில் கொஞ்சத்தை வெளியில் கொட்டுவார் .மிச்சத்தை தூக்குவார் சுமந்து செல்வார். கரையில் சரியாகக் கொட்டாது சிந்துவார். களேத்தார் போலஇளேப்பார். எட மிளவும் பசிக்குதே என்று பிட்டுத் தின்பார். பிட்டினே வாயில் இட்டு மென்றிடும் போது அம்மை மேலும் ஒரு அருள் நோக்கம் விழும. அம்மா நீ நல்ல மனமுள்ளனி! நீ அவித்த பிட்டு அற்புத மாயிருக்கு.இதுவெல்லாம் கடவுளர்க்குத் தான் கொடுப்பது என்பார். பாடுவார் கூடையும் தலேமேல் வைத்து கூத்தாடுவார். அயலில் வேலே செய்வார் இவர் நிலேகண்டு இங்கே வாப்பா என்ருல் அங்கால் தூரப் போவார்.

அல்லாமல் வேலே செய்யும் மற்றவரை கிட்டிச்சென்ற போது எங்களேக் நீ குழப்பாதே இங்கு வராதை தூரப்போ என்ருல்மிக நெருங்கி சொன்ன அவரின் அருகில் நிற்பார். இந்தநிலேயாக பல ஆடலே கூலியாளனை எம் ஐயன் புரிந்திட அவர் செயலே நோக்கும் அம்மையின் உள்ளம் பரிகிறது.ஐயோ ஆரும்துணேயிலா பாவிக்கு துணேயாக இந்தப்பிள்ளே வந்தது. எனக்கு வேலே செய்யாவிட்டால் பரவாயில்லே ஆனல் இவர் செயலே பாண்டிய அரசன் தூதுவர் கண்டால் நொருக்குவாரே ஐயோ நான் என் செய்ய என வாடிடும் அவளே உடன் நோக்கி அம்மா பயப்படாதே இப்படித்தான் எனது வேலே உனது கரைப்பங்கு அடைப்பது எனக்கு ஒரு பெரிதல்ல ஒரு நொடிப் பொழுதில் அடைப்பேன். நீ எதற்குமஅஞ்சாது உன்மனேயில் சென்று இருப்பாய் என விடுக்கின்ருன் அம்மையும் அவர்வாக்கை ஏற்று தமது திருவுடையகுடிசையைச் சென்று சேர்கின்ருள்.

அப்பொழுது அவள்போயதும் எம் கூலியாளன் தான் கடமை புரிந்து களேத்துளார் போன்று வைகையாற்றங்கரை மீது உள்ள மணல் பரப்பிலே ஓர் கொன்றை மர நீளலில் சென்று யோக நித்திரை செய்தருளுகின்ருர்.

அப்பொழுது அங்கு வைகைக் கரை சரியாக அடைபடுகின்றதோ என்று மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர் குழு வந்து சேர்கிறது. அவர்கள் எல்லாரும் அடைக்கின்ற கோலறைப் பங்கைப்பார் வையிட்டு யாவரும் நன்குற அடைத்தார் எனதிருப்தி கொண்டு சிவன் அடைக்கும் கோலறைப் பங்கைப் பார்வை இடும் பொழுது அது செப்பமாக அடைபடாது கொஞ்ச மண் சிந்திடும் படியே போடப்பட்டது கண்டு மிகுகோப மடைந்தனர். இதுயார் செய்த ஏமாற்று வேலே என்ருர். உடன்பக்கில் நின்ருர் பதைப்புடன் அவர்களே நோக்கி ஐயன்மீர்! அதோ அந்த கொன்றைமர நீழலில் படுத்திருக்கும் ஒருவன் அவன் வந்தி எனப் பேருடைய நரைத்த மூதாட்டியின் கூலியாளன். அவள் பங்கை அடைக்கும் படி வந்தவன். வந்த அவன் இங்கு வந்த அந்த ஆச்சியையும் போகும் படி சொல்லி விட்டு ஒரு நேரமாகிலும் ஒழுங்காக வேலே செய்யான். மண்ணே அள்ளுவான் சிந்துவான் சிதறுவான் எங்களேயும் வேலே செய்ய விடாது பாடி ஆடி ஒடித்திரிந்தான். அவனேப்பார்த்தால் அரச குமாரன் போல்பவன். என்ன செய்வது நாம்பலதரம் இப்படி விளேயாடாதே வேலே செய் என்ருல் எங்களே நோக்கி சிமிட்டுவான். ஒரு சொல்லும் கேட்பவனுயில்லே அவன் என்றலும்; அது கேட்டதலேமை அதிகாரிக்கு அளவிறந்த ஆத்திரம் வந்தது. உடன் தனது உதவியாளனே நோக்கி பிடித்துக் கொண்டுவா அவனே இங்கு என்ருன். என்றலும்அவன் சென்று படுத்திருந்த கூலியாளரை ஏசியபடி அணுகலும் அவர் திடுக்கிட்டு எழுந்து அதிகாரிக்கு பயந்துளார் போல் நின்று வர மறுத்தலும் அவருடைய திருக்கரம் பற்றி கொற கொற என இழுத்து வந்து தலேமை அதிகாரி முன் நிறுத்தலும் தலேமை அதிகாரி கூலியாளே கொடுமையுடன் நோக்கி இவன் செய்ததவறிற்கு இவன் மேனி இரத்தம் வடிய அடியுங்கள் என்றனன்.

அவனும் பிரம்பு ஒன்றை கையில் இறுமாப்புடன் எடுத்தரன் ஓங்கி ஒரு அடி அப்பன் கூலியாளனுக்கு கொடுத்தான் கொடுத்தலும் கூலியாளன் உடன் ஓர் கை மண்ணே கையால் அள்ளி வைகைக் கரையில் கொட்டிக் கரையையும் நிரப்பி யாவரும் திடுக்கிடும் படி மறைந்தார்.

ஆனல் அந்த ஒரு அடி இந்த உலகில் வான உலகில் வாழும் எல்லா உயிரினத்தின் மீதும் பட்டது. அந்த அடி பாண்டியனிலும் மாணிக்கவாசகரிலும் பட்டுக் கொண்டது. திகைத்தார் அவர். தமது உடலில் எப்படி அடி உறைத்தது என்று நேர்கின்றனர். இறைவன் வந்திக்கு கூலியாளனுக வந்து மண் சுமந்தான் எனத் தெரிந்தனர். பரவசமாயினுர் அன்பு மயமானுர். இது உணர்ந்த பாண்டிய அரசன் முற்றிலும தன்னே அன்புருவாக மாற்றுகின்ருன். உண்மை உணர்கின்ருன். இவையெல்லாம் தன் நாட்டில் நடைபெற திருவருள் கூடியதற்கு காரணம் மாணிக்க வாசகரே என உணர்கின்ருன். அந்தோ எனது பொருளே அவர் சிவனடியார் கைபில் கொடுப்பது தகாது என எண்ணி அவரை எத்துணேத்துயர் புரிந்தேன். இது எல்லாம் என்ன பிழை செய்தேன்எனஎண்ணிபதைபதைத்தான். பெருமூச் செறிந்து கவலேயுற்று தன் பிழை யுணர்ந்து இரங்கிய அவன் விரைந்துசென்று மாணிக்கவாசக பெருமானே அணுகி அவர் திருப்பாதம் மீது அப்படியே வீழ்ந்து வணங்குகின்ருன்.

வணங்கி எழுந்து முன்னின்று பெருமானே உம்முடைய பேருளால்அடியேனும் பேரின்பம் ஒன்றுளது அது தான் பெரிதென்றுணரப் பெற்றேன். என் அறியாமையாலே ஆசையை மீளவிளேக்கும் கொடிய வினே செறிந்த பொருளே விரும்பி உம்மை நான் வருத்தி விட்டேன். என் செய்வேன் பாவியேன். என் பிழையெல்லாம் பொறுத்தருள்வாய் என இரந்து மிளவும் பணிந்து சொல்வான்“ஐயனேஇந்த எனது மதுரையிலே எல்லா உலகமும் போற்றும்படி எம் பெருமான் முன் குதிரை மீது எழுந்தருளி வரவும் மண் சுமந்து திருவிளேயாடல் புரியவும் நான் பெற்ற பேரருளாய புகழ் ஒன்றும் காணும். ஆதலால் அதை செய்வித்து வைத்தருளிய தேவரீருக்கு விண்ணப்பம் ஒன்றுண்டு. அது தான் தேவரீரே இந்த நாட்டின அரசராக ஆளவும் நான் உம் சேவகனுக உம்திருவடித் தொண்டு செய்யவும் இசைந்தருள்வீர்'' என இரக்கின்ருன்.

மாணிக்க வாசகர் அதுகேட்டு முறுவல் செய்து தாம் குருந்த மர நிழலில் இருந்த குருமணியின் திருப்பாதம் போற்றி அவர் அருளால் தூங்காமல் தூங்கும் சுகமாய சும்மா இருக்கும் பேரின்ப நிட்டை அடைந்த பெருவாழ்வு நினேந்து; அரசனே நோக்கி அரசே! இவையாவும் எனக்கு வேண்டாம். உன்னிடம் நான் கேட்பது என்னே இப் பதவியால் நீக்கி திருப்பெருந்துறையில் திருக்குருந்தடிசேர விடுப்பதே என பதில் வணங்குகிருர். பாண்டிய அரசன் அதுகேட்டு ஐயனே தங்கள் விருப்பத்தை நான் தடுக்கலாமோ என மொழிந்து மீளவும் பணிகின்ருன். மாணிக்கவாசகரும் அரசனே வணங்கி விடை பெற்று ''சும்மா இருக்கும் சுகம் பெற திருப்பெருந்துறை நோக்கி அரசவாழ்விற்குரிய உடையாவும் நீக்கி கோவணஉடையுடன் அன்றி மற்று எல்லா சுகவாழ்வும் இழந்து செல்கின்ருர்.

இத்தகைய“சும்மாவின்''பெருமையை அம்மாவும் ஐயாவும் மட்டுமல்லாது எங்களது ஐயாக்களும் அம்மாக்களும் ஆரும் அறிவாரோ?

சொல்லுகைக்கு இல்லே என்று
எல்லாம் இழந்து சும்மா
இருக்கின்ற எல்லேயுள்
செல்ல எனே விட்டவா.
(கந்தரலங்காரம்)
செம்மான் மகளேத்திருடும் திருடன்
பெம்மான் முருகன் பிறவான் இறவான்
சும்மா இரு சொல்லற என்றலுமே
அம்மா பொருள் யாதும் அறிந்திலனே

## சும்மா இருக்கும் சுகம் வாய்ப்ப சிறுபல்லீ! சொல்லாயோ!

சொல்ல முடியாத பொருள்
சொல்ல வருமாகில்
சும்மா இருக்கின்ற சுகம்
கிடைக்கு மாகில்
எல்லாரும் காண எனேப்
பித்தேற்று மாகில்
இன்னு மொருகால் வரவு
சொல்லு சிபல்லீ
(யோக சுவாமிகள்)
சிந்தையை அடக்கியே
சும்மா இருக்கின்ற திறம்
அரிது
சத்தாகி என் சித்தமிசை
குடிகொண்ட அறிவான
தெய்வமே தேசோமயானந்தமே
தாயுமானவர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரைச் சிறப்பு

ஆதிரை நாள் காணுதே போதியோ பூம்பாவாய் என்று திருஞானசம்பந்தப் பெருமான் சிவநேசருடையமகளாரின் எலும்புக்குடத்தை உயிர் பெறச் செய்யும் போது தாம் பாடியருளிய தேவாரப் பதிகத்தில் மொழிகின்ருர்.

திருவாதிரை நாளின் சிறப்பு அத்துணை பெரிதாவது என்பது ஞான முனிவனது திருவாக்காகும். இதனை நாம் கருத்தில் எடுத்துக் கொண்டால் திருவாதிரை பற்றிய மேன்மை நன்கு புலப்படும்.

இத்திருவாதிரை ஒவ்வோர் மாதமும் வருவது. அன்று சிவனை வழிபட மிகவும் பொருத்தமாவது. ஆதியன்ஆதிரையன் என்று எம்பெருமக்கள் சிவனை தமிழ் வேதத்தில் மொழிந்துள்ளனர். ஆகவே திருவாதிரை சிவபெருமானது நட்சத்திரமாகும். அது சோதி வடிவானது. அன்று சிவனுக்கு விழாவெடுத்தல் மிகவும் நன்று. இந்தவகை மாதம் தோறும் வரும் திருவாதிரையில் திருநீலநக்க நாயனர் சிவனை வழிபட்ட வரலாறும் அவருக்கு சுவாமி அருளிய வரலாறும் பெரிய புராணத்து வருகிறது.

ஒவ்வொரு மாசமும் வரும் திருவாதிரையில் மார்கழி மாதத் திருவாதிரை மிகவும் மேன்மையாவது. அந்த திருவாதிரையை ஒட்டி முன் பத்து நாளும் கன்னிகளது நோன்பு விரதமாகக் கருதப் படுவது. இக்காலங்களில் கன்னிகள் தாங்கள் விரதமாக சீலமுடன் இருந்து அதிகாலையில் எழுந்து நீராடி கூந்தல் முடியாது பிட்சை கொடுத்து உண்மை பேசி அடக்கமாக இருந்து அவ்விரதத்தைத் அநுட்டிப்பது வழக்கமாக உள்ளது.

இது பாவை நோன்பு எனப்படும். ஆனல் இந்த பாவை நோன்பு காலத்தில் கன்னிகள் பாடும் பொருட்டு மாணிக்க வாசகர் பாடியருளியது திருவெம்பாவைப் பாடல்.

இந்த திருவெம்பாவைப் பாடல் இக்காலத்து எல்லா கோயில்களிலும் ஓதப்பட்டு வருகின்றது. அதே ஒரு உற்சவமாகவும் கருதி செய்யப்பட்டு வருகின்றது. மாணிக்க வாசகரது திருஉருவை எழுந்தருளப் பண்ணி திருவெம்பாவை ஒதி வழிபட்டு வருகிருர்கள்.

ஆனல் அதேவேளை பெரும்பாலும் இந்த மார்கழி திருவாதிரை காலத்து திருவாசகத்தை த்விர்ந்து ஏனைய திருமுறைகள் ஓதக் கூடாது என்ற ஒரு கருத்துடன் எட்டாவதான திருவாசகமன்றி முதல் ஏழு திருமுறைகட்கும் இடங்கொடுக்காது வரப்படுகின்றது. இது எக்காரணமோ தெரியவில்லை? இப்படிவழக்கத்தில் வரவேண்டியதற்கு முன்னை ஏழு திருமுறைகளில் என்ன காரணம் உளது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. ஒன்றில் மார்கழிமாதத்தில் முதல் ஏழு திருமுறையான சம்பந்தப் பெருமானுடைய திருநாவுக்கரசர் பெருமானுடைய சுந்தரமூர்த்தி சுவாமிகளுடைய பதிகங்கள் ஓதக் கூடாத காலம் என்பதோ? அல்லது வேறு எதுவோ மார்கழி மாசத்தில் எம்பெருமக்கள் மூவருடைய தமிழ்பாடலாகும் வேதங்கள் ஓதப்படுவதில்லை. அப்படி இவர்களது வேதம் ஓதப்படக் கூடாது என்ருல் ஆரிய வடமொழி வேதம் ஓதப்படுகின்றதே? அதற்கும்காரணம் தெரியப் படவில்லை.

இப்படியாக எமது மூவர் முதலிகளுடைய வேதத்தை மார்கழி திருவாதிரைக் காலத்து ஓதாமல் காப்பிட்டு வைப்பதன் காரணம் தெரியவில்லை. நன்குடன் இந்தக் காலத்து நாம் ஓதி நற்பயன் அடைந்திட இதனை இந்த காலத்தில் ஓதாதீர் என்று எங்காகிலும் எம்பெரு முதல்வர் மூவரும் ஒருக்காலும் ஓரிடத்தும் சொல்லவில்லை. ஆகவே இந்த ஒருகாரியத்தை நாம் எல்லோரும் சிந்திக்கவேண்டும்.

இறந்த பெண்ணின் எலும்புக் குடத்தை உயிர் பெற்று உருவாக்க வல்ல பாடலை; மருந்திஞல் தீராத நோயை மாற்றிய பாடலை; பாலைவனத்தை பசுமை நிலையாக்கிய பாடலை; பாம்பு கடித்து இறந்தவனை உயிர் பெற்றெழச் செய்த பாடலை; ஆரிய வேதம் அடைத்திட்ட கதவைத் திறந்திட வைத்த பாடலை; மீள அடைத்த பாடலை செலுத்தும் ஆள் இலாது ஒடம் (தோணி) பெருவெள்ள ஆற்றில் பக்குவமாக ஓட்ட வைத்த பாடலை இன்னும் எத்தனையோ அற்புதங்களை எல்லாம் செய்து வைத்த; இவ்வுலகில் வாழும் தமிழ் மக்களாய எங்களது பொக்கிஷமாய் புண்ணியமாய்; கவசமாய் காப்பாகி அன்றும் இன்றும் என்றும் புனிதமுடன் மிளிர்கின்ற இப்பாடல்களைத் திருவெம்பாவை காலத்திலோ எந்த மாசத்திலோ எந்த ஆண்டிலோ தவிர்ப்பது நன்றல்ல. ஒன்றிற்காக இன்னென்றைத் தவிர்ப்பது நீதியாகாது.

திருவெம்பாவை காலத்தில் திருவெம்பாவைப் பாடலைப் பாட வேண்டாமென்று யாரும் சொல்லார்கள். அதேவேளை அது மட்டும் தான் மற்றவை ஓதக் கூடாது என்பதே மனதிற்கு சங்கடத்தைவருவிக்கின்றது.

திருநாவுக்கரசு சுவாமிகள் திருவாரூர் செல்கின்ருர். அங்கு தங்கி புற்றிடம் கொண்ட புண்ணியனைத் தரிசித்து ஆநந்த முறுகின்ருர். அருமந்த தமிழ் வேதம் பாடினர்,

பாடி மகிழ்ந்து இன்புற்று அருள் வசமாகி அருளால் திருவாரூர் நின்றும் புறப்பட்டுதிருப் புகலூர் நோக்கி வருகின்ருர். வருகின்ற திருநாவுக் கரசர் பெருமானைச் சம்பந்தப் பெருமான் காணுகின்ருர். கண்டு அப்பருடன் அளவளாவி இன்புற்று திருவாரூரில் திருவாதிரைச் செல்வம் பற்றி வினவல் செய்கின்ருர். அப்போது திருநாவுக்கரசர் பெருமான் திருவாதிரையின் செல்வம் பற்றி தேவாரப் பதிகமாகவே மொழிகின்ருர்.

ஓர் விழா அருளின் தொடர்பு மிகுந்து கொண்டால் அது எல்லோருக்கும் மகிழ்ச்சிதருவது அது மறக்க முடியாதது. ஆகவே திருவாதிரையில் தாம் கண்டு மகிழ்ந்த அருட் செல்வம் பற்றி சொல்லியருளும் பாடல் கீழே தருகின்ருேம்.

முத்து விதான மணிப்பொற் கவரி முறையாலே
பத்தர்க ளோடு பாவையர் சூழப் பலிப்பின்னே
வித்தகக் கோல வெண்தலை மாலை விரதிகள்
அத்தன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

முத்துக்கள் மேல் மாலையாகக் கொண்ட மேல் தூக்கமும் பொன்னின் கவரிகளும் பரப்பிய அழகுடைய அலங்கார முறையாலே; பத்தர்களோடு பத்தினிகளும் சூழ்ந்து திருப்பலிகள் ஏந்திவர அவர் பின்பாக; வித்தகத்தின் கோலமுடைய வெண்தலை மாலை அணிந்த விரதிகள் யாவரும் பரவசமாகி நின்ருர். அந்தோ அதைச் சொல்ல முடியாது. எம்பெருமான் திருவாரூர் திருவாதிரை நாள் அதுவண்ணமாயிருந்தது. 1

நணியார் சேயார் நல்லார் தீயார் நாடோறும்
பிணிதான் தீரும் என்று பிறங்கிக் கிடப்பாரும்
மணியே பொன்னே மைந்தா மணாளா என்பார்கட்
கணியான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அருகாக உள்ளவர் தூரத்துள்ளவர் நல்லவர் கெட்டவர் எல்லாரும் அங்கு வந்து நாள்தோறும் எம்பிணி தீரும் என்று பாடாகிக் கிடப்பாரும்; அன்றியும் என் மணியே பொன்னே மைந்தா என் மணாளா என்பார்கட்கு அருகாக நின்று அருள் புரிவானுடைய திருவாதிரை நாள் அது வண்ணமாக இருந்தது: அது ஒரு ஆநந்தக் கூத்து. அதை என்னென்று சொல்வது: 2

வீதிகள் தோறும் வெண்கொடி யோடு விதானங்கள்
சோதிகள் விட்டுச் சுடர்மா மணிகள் ஒளிதோன்றச்
சாதிக ளாய பவளமும் முத்துத் தாமங்கள்
ஆதி ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

வீதிகள் தோறும் எங்கும் வெண் கொடியோடு வெள்ளையும் மேல் கட்டியபடி அதன் கீழாக சோதிகள் விட்டு சுடருடைய பெருமணிகள் ஒளி தோன்றிட நற்சாதியான பவளமும் முத்தும் இவற்ருன மாலைகள் நிரம்பி இருந்தன: இவ்வகையாக எமது ஆதியான பெருமானுடைய திருவாதிரை நாள் அது வண்ணமாக இருப்பது. 3

குணங்கள் பேசிக் கூடிப்பாடித் தொண்டர்கள்
பிணங்கித் தம்மிற் பித்தரைப் போலப் பிதற்றுவார்
வணங்கி நின்று வானவர் வந்து வைகலும்
அணங்கன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

அப்பனுடைய குணங்களைப் பேசி கூடிப்பாடித் தொண்டர்கள் தம் நிலையும் மறந்து மாருட்டக் காறரான பித்தரைப் போல பிதற்றுவார். தேவர்கள் நாள் தோறும் வந்து வணங்கி நின்று வாழ்த்திட அணங்கு செய்திடும் அப்பன் அவன் திருவாதிரை நாள் அது வண்ணமாக உள்ளது: 4

நிலவெண் சங்கும் பறையும் ஆர்ப்ப நிற்கில்லாப்
பலரு மிட்டகல்ல வடங்கள் பரந்தெங்கும்
கலவ மஞ்ஞை காரென் றெண்ணிக் களித்துவந்
தலம ராரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

நிலவு போலும் ஒளியுடைய வெண்சங்கும் பறையும் முழங்க நிற்காது பலரும் இட்ட கல்லவடப்பறையோசை பரந்து எங்கும் கலந்து விம்ம அது கண்ட மயில்கள் இது மேகம் என்று எண்ணி களித்து வந்து அலமந்திட அத்தகைய அற்புத விளைவால் மிகுந்துள்ள திருஆரூர் திருவாதிரை நாட் சிறப்பு அது வண்ணமாகி இருப்பது. 5

விம்மா வெருவா விழியாத் தெழியா வெருட்டுவார்
தம்மாண் பிலராய்த் தரியார் தலையான் முட்டுவார்
எம்மான் ஈசன் எந்தை எனப்பன் என்பார்கட்
கம்மான் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

விம்முவாரும் திகைத்து வெருக்கொள் வாரும் முளிசுவாரும் வெறித்தபார்வை உடையாரும் உரக்கக்கத்துவாரும் கிட்டப்போனல் வெருட்டுவாரும் தமது சித்த நிறைவு நீங்கினராய் தலையால் அடிப்பாரும் எம்பெருமானே ஈசா எந்தையே என் அப்பா என்பார்க்கு அவரின் அப்பனய் அருள் புரியும் திருவாரூர் கடவுளின் திருவாதிரை நாள் அதுவண்ணமாவது. 6

செந்துவர் வாயார் செல்வன சேவடி சிந்திப்பார்
மைந்தர்க வோடு மங்கையர் கூடி மயங்குவார்
இந்திர னாதி வானவர் சித்தர் எடுத்தேத்தும்
அந்திரன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

சிவந்த பவளம் போலும் வாயுடையார் எம் செல்வனுடைய திருவடிகளைச் சிந்திப்பவராகும் ஆடவர்களுடன் பெண்களும் கூடி மாருட்டம் கொண்டவர் போல் மயங்குவார். இந்திரன் ஆதியான எத்தேவரும் சித்தர் களும் கைகள் கூப்பி எடுத்துப் போற்றிடும் அறியொணுத கடவுள் திருஆரூர் அமர்ந்த பெருமானது திருவாதிரை விழா அது வண்ணமாவது:

முடிகள் வணங்கி மூவா தார்கள் முன்செல்ல
வடிகொள் வேய்த்தோள் வானர மங்கையர் பின்செல்லப்
பொடிகள் பூசிப் பாடுந் தொண்டர் புடைசூழ
அடிகள் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

(தொடர்ச்சி 8-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாதிரைச் சிறப்பு ....

7 | பக்கத் தொடர்ச்சி

மூவாத பெருவாழ்வுடைய கடவுளர் முன்னே சென்றிட; வடி கொண்ட கணுக்குடைய மூங்கிலின் அழுத்தம் போலும் தோளுடைய தேவப் பெண்கள் பின்னுகச் சென்றிட; மேனியில் திரு நீறு அணிந்து பாடுகின்ற தொண்டர் புடை சூழ்ந்து சென்றிட எம்பெருமான் திருவாரூர் ஐயனது அருள் சிறந்த எழுச்சியுடைய திரு ஆதிரை நாள் அது வண்ணமாக இருப்பது. 8

துன்பம் நும்மைத் தொழத நாள்கள் என்பாரும்
இன்பம் நும்மை ஏத்து நாள்கள் என்பாரும்
நும்பின் எம்மை நுழையப் பணியே என்பாரும்
அன்பன் ஆரூர் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

பெருமானே உம்மைத் தொழாத நாள்கள் எமக்கு துன்பமான நாள் என்பாரும்; பெருமானே! உம்மை ஏத்தும் நாள் எல்லாம் இன்பமுடைய நாள் என்பாரும். உமது திருவடி பின்னுக நாம் தொடர்ந்து வந்திடதே வரீர் பணித்திடும் என்பாரும் எமது அன்பன் திருவாருர் பெருமானுடைய திருவாதிரை நாள் அதுவண்ணமாவது. 9

பாரூர் பௌவத் தானைப் பத்தர் பணிந்தேத்தச்
சீரூர் பாடல் ஆடல் அருத செம்மாப்பார்ந்
தோரூர் ஒழியா துலகம் எங்கும் எடுத்தேத்தும்
ஆரூ ரன்றன் ஆதிரை நாளால் அதுவண்ணம்.

பாரில் புரளும் கடல் போன்றகிருபை உடையவனை பத்தர்கள் பணிந்து ஏத்திட; சீரும் சிறப்பும் பெருகும் பாடலும் ஆடலும் அருத அற்புதத்திருக் கூத்தாம் செவ்விய நிலையை அநுபவித்து இன்புற்று ஓர் ஊரும் தவருது உலகம் எங்கும் எடுத்துப் போற்றும் எம் திருவாரூர் பெருமானுடைய திருவாதிரை நாள் அது வண்ணமாவது. 10

## கண்ணைத் துயின்று ....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வார்த்தக் கருத்து; அதாவது உட்பொருள் தலையங்கம் கொடுத்திருக்கிறர்கள். உதாரணமாகசிவ புராணத்திற்கு சிவனது அநாதி முறைமை யான பழமை - என்று இப்படி ஒவ்வொரு பாடலுக்கும் ஒவ்வொரு உட்பொருள் தலையங்கம் கொடுத்துள்ளார்கள். இந்த வகையில் திருவெம்பாவைக்கும் ஓர்தத்துவார்த்தப் பொருள் ''சத்தியை வியந்தது'' என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

ஆனுல் அந்த சக்தியாவதுயாது என்பது தான் கேள்வி? இந்த சக்தி எவ்வடிவானது எங்குள்ளது என்பது தெளிய வேண்டுமே! ஆகவே அந்த சக்தியை நாம் நினைக்கப் போனுல் மனிதர் ஒவ்வொருரிடத்தும் உளதாகிய சத்தியையே குறிப்பிட்டுள்ளார். இந்த மனிதனுடைய சக்தி அபாரமான வலு உடையது. அந்த சக்தி உண்மையில் சோம்பியே கிடக்கின்றது. அந்த சக்தியை யாது என நாம் சொல்ல வேண்டியதில்லை, எல்லாக் கல்வியறிவுடையார்க்கும் நன்கு புலப்படும் ஒன்று. ஒவ்வொரு வருடைய உடம்பிலும் உள்ள ஆற்றல் இந்த ஆற்றலை நாம் நன்குஉணர்ந்து கொண்டால் அதைமுறைப் படி கையாளப் பழகிக் கொண்டால் பின்னர் எமக்கு நிகராவார் யாருமில்லை

இதைத்தான் யோகசுவாமிகளும் நீசடப் பொருளல்ல நிறை தருசித்து என்று அதனை நன்கு தெரிந்து தெளிந்து உணர்ந்து கூறியருளி உள்ளார். அத்துடன் சத்தி சிவம் ஒன்றுகும் தன்மையைக் காணேம் எனவும் மொழிந்துள்ளார். ஆகவே மணிவாசகரும் இந்த சத்தியை துயில்எழுப்புவது போன்று தேசத்து கன்னிகள் பாவை நோன்புக்காக நீராடப் போவாரை நோக்கி அவர் மொழிந்தவாறு போல மிகவும் நயமுடன் திருவெம்பாவை பாடல் ஓதியது மாகும். அப்பாடலில் கன்னிப் பெண்கள் தமக்கு ஓர் வாழ்க்கைத் துணைவனை நல்லவனுகப் பெறுதற்குற்ற வகையாக வேண்டி அதற்குற்ற வகையாக அமைந்திருந்தாலும் முற்றிலும் எமது சோம்பிக் கிடக்கும் ஆற்றலைத் துயில் எழுப்புவது போன்றே அப்பாடல் உளது. அதிலே தான் ஓரிடத்து மணிவாசகர் கூறுகின்றர் ''கண்ணைத்துயின்று அவமே காலத்தைப் போக்காதே என்கின்றர்.

இந்த வகை நாம் வாழ்க்கையை நினைக்கும் போது இந்த எமது சத்தியைப் பற்றி உணராதவாறு; நித்திரையில் இருப்பான் யாவற்றையும் மறந்திருப்பது போல் நடந்து கொண்டேபோகின்றேம்.

இந்த சத்திகள் இரண்டுகாலும் கையும் படைத்த எல்லா மனிதரிடமும் உண்டு. இல்லாதவர் ஒருவருமே இல்லை. இதனை உணர்ந்த மணிவாசகர் கடவுளையாரும் அடையலாம் என்று ''யாவரும் பெறஉறும் ஈசன் காண்க'' என்கின்றர்.

வாழ்வில் இத்தகைய நிலையை நாம் சிந்தித்தே ஆகவேண்டும். இந்த சத்திகளை நல்நிலையாக்கிக் கொண்டால் நமக்கு அளவிலாத ஆநந்தப் பெருக்கினை அவை தந்து நிற்பன.

இந்த சத்திகளை தீயவழியான வஞ்சனையின் பாலான செயல்களைப் புரிய நாம் கொள்ளாது நற்செய்கைகளுக்காக பாவித்துக் கொண்டால் அவை உண்மையில் நமக்கு உறுதிதரும். சோம்பலும் நித்திரையும் துயரத்திற்கேவித்து. சோம்பல் உடையார் அதிக நித்திரை செய்வார் பெரும் பாவிகள் என்று பெரியோர் சொல்வர். ஆதலால் இந்த ஒரு சோம்பலை இன்றைய உலகில் பெரும் பாலும் இயந்திரங்கள் பெருக்கிவிடுகின்றன. மனிதன் நல்நிலையடையாத படி பெரும் பாலும் அவனை சோம்பலுக்கே அடிமையாக்கி விட்டன; இயந்திர சாதனங்கள் என்றுல் அதில்உண்மை இருக்கின்றது. அதிக தூரம் கூட இன்றைய மனிதன் நடக்க முடியாது அலுப்புக் கொள்கின்றுன். அப்படியான அவன் எப்படி உன்னத நிலையை அடைவான் கொஞ்சம் நடந்தவுடன் களைப்பு ஏற்படுகிறது. வேதனை வருகிறது.

உடலில் சோம்பல் பெருகினுல் அது இந்திரியங் கட்கு அதன்வழி இயையும் படியான நிலை நமக்கு ஏற்படும். அதன் படி இயைந்து கொண்டே போனுல் அதனுல் மனிதன் மரணம் என்னும் துன்பத்திற்கே ஆளாகின்றுன். இந்த வகையாக நாம் சோம்பலுக்கு நித்திரைக்கு எமது உடலை இரையாக்காது உறுதியுடனும் நிதானத்துடனும் தருமத்தைப் பேணி உண்மைப் பொருளை உணர்ந்து தெளிந்து கொண்டு; நம்மை வளர்த்துக் கொள்வோமாக.

# அருட்செல்வம்

அருட் செல்வம் செல்வத்துள் செவ்லம் அதை விடுத்த பொருட்செல்வம் அது பெரிதல்ல. அது மிகவும் தாழ்ந்த குறுகிய மனப்பாங்குடையவர்களிடத்தும் உண்டு என் பதனுல் அந்த அருட்செல்வந்தான் பெரியோரிடத்துபொருந்திக் கொண்ட பொருளாகும் என்பது வெளிப்படையாகின்றது.

எவ்வாறு பொருட்செல்வம் இல்லாதவனுல் இவ்வுலகில் பெறுதற்கு வேண்டிய பொருள்களைப் பெறமுடியாத படி வெறுப்பும் குலத்து நலிவும் துயரமும் மனவெக்காளமும் கொண்டு அதனுலே தான் விரும்பிய படி பல உல்லாச வசதிகளுடன் வாழ முடியாது போகின்றதோ அதே போன்று அருட்செல்வம் இல்லாதவனுல் தெய்வத்தின் அருளைப் பேரின்பத்தை எந் நிலையாலும் பெறமுடியாது.

பொருட்செல்வம் இவ்வுலகில் யாவராலும் பெறமுடியும்: அதற்கு வேண்டிய ஒரே ஒரு தகுதி சோம்பலின்மை. அதாவது எவற்றிலும் நிதானமும் சுறு சுறுப்பும் இந்த இரண்டும் ஒருவனிடத்து இருக்குமேல் அவன் கோடீஸ்வரனுக மாறலாம. எந்த வறுமையையும் ஒருவனுடைய நிதான புத்தியும் சுறு சுறுப்பும் ஊக்கமும் போக்கும் என கந்தபுராணத்து கச்சியப்பர் மிக அழகாக எடுத்து மொழிகின்றர். ஆகையால் உலகில் எமக்கு ஒன்றும் வழியில்லை என்று பிறரைக் கெஞ்சுவாரையும் சந்தியில் கூடி வீண்வார்த்தை பேசிபொழுது போக்குவரையும வீடு வீடாகத்திரிந்து தமக்குத் தக்க விண்ணுணம் பேசி திரிவார்தான் இவ் வுலகில் வாழமுடியாத வறுமையுள் தங்கி இருப்பார். காலையில் எழுந்து பொறுப்புணர்ச்சியுடன் நடந்து தனது கருமம் சிறிதோ பெரிதோ அதை அக்கறையுடன் செய்வாரை ஒரு போதும் வறுமை தீண்டாது. அது எல்லாராலும் செய்யக் கூடிய காரியம் என்று பெரியோர் சொல்வர். இதுபற்றியே வள்ளுவரும் எனக்கு ஒன்றுக்கும் வழி இல்லையே என்று சோம்பி இருப்பானை இப்பூமாதேவியே நோக்கி சிரிப்பாள் என்றுர்.

இந்த பொருட் செல்வம் பெருக்கப் பெருக்கப் பெருகும்; அழிந்தாலும் பின்னரும் முயன்று பெறலாகும். இத்தகைய பொருட் செல்வத்திற்கு நீதி நியாயம் என்பது வேண்டியதில்லை. ஊழின் வழியாக அது தன் பாட்டில் வந்து பெருகி நல் வீடு வாகனம் மதிப்பு இறுமாப்பு அடிமை பொன் பூமி புகழ் யாவுமாக இவ்வுலகில் எமது வாழ்க்கை இருக்கும் துணையும் ] நன்று பயன்பெறும்.

ஆனுல் இத்தகைய பொருட் செல்வம் இந்த உடம்பு நீங்கியபின் பயன் தராது. எமது உடம்பு நீங்கியபின் அந்த உலகத்திற்கு இதனுல் எதும் பயன் இல்லை பதில் அங்கு துன்பமே பெருக்கும் என பெரியோர் மொழிகின்றனர். இந்த உலகில் எத்துணை இந்த பொருள் இன்பத்துள் அழுந்திளுரோ அவ்வளவு துன்பம் அங்கால் காத்திருக்கின்றது என்கின்றனர். இதனை மிகு தெளிவுடன் தமிழ் ஞான முனிவன் ஞானசம்பந்தன் மிகு தெளிவாகச் சொல்கின்றுர். தமது தமிழ் வேதத்து அவர் சொல்கின்ருர் நம் பொருள் நம்மக்கள் என்றுநீர் நச்சிஇச்சை செய்து அவற்றில் அழுந்தி இன்புற்று வாழ்ந்தால் வாழும் துணையும் அது சரி வாழ்ந்து இறந்தபின் அவ்வுயிர் அம்பரம் அடைந்து சால அல்லல் அநுபவிக்கும் என்கின்றுர்; இவருடன் அருணகிரியாரும் சேர்ந்து கொண்டு தமது திருப்புகழ் கந்தரலங்காரப் பாடல்களில் சொல்கின்றுர். அவர் சொல்கின்றுர் இவ்வுலகில் பெரும் போக போக்கியங்களை அநுபவித்து மகிழ்ந்து திரிந்தாரை இயமதூதர் கண்டவுடன் அடே நீ எத்தனை துயரம் புரிந்து துன்பப் படுத்தி விட்டு வந்தாய் என்று அவரை மயலது பொருத வம்பன் இவன் பொல்லாத ஆசை பிடிச்சவன் என்று மடியில் பிடித்த பிடியில் நின்று கேட்பார் என்கின்றுர் இக்காலத்தில் கொழும்புத்துறை யோகசுவாமி அவர்களும் தமது நற்சிந்தனைப் பாடலில் பொன்னுசை மண்ஆசை பெண்ஆசையால் மனிதரெல்லாம் சின்னுபின்னுமாருரடி என்றே சொல்கின்றுர்.

சிலர் கேட்பது உதைக் கண்டனுங்களோ! மறு பிறவி இருக்கின்றது என்னென்று நம்புவது. அது எப்படி நிரூபிப்பது ஏதோ இப்ப இருக்கும் தனையும் நாங்கள் வாழ்ந்தால் சரி என்பர். அங்காலை போனுல் என்னமாதிரியானுலும் என்ன என்கின்றுர்கள். அப்படிப் பேசுவார் பலரையும் அவருடைய இயல்பை நோக்கினுல் இருக்கும் தனையும் எத்தனை பேரைக் கொன்றுல் என்ன யார் எக்கேடு கெட்டுப் போனுல் என்ன என்ற ஒரு உணர்வுடன் விளங்குதலைக் காணலாம்; உண்மையில் இவர்களையே கலி உடையவர் என்று நூல்கள் சொல்வன. கடவுள் ஒருவர் இருக்கின்றுர் என்று நம்பும் எவனுக்கும் மறுபிறவி உண்டு என்ற நம்பிக்கை இயல்பில் வரும். இந்த உடல் நீங்கினுல் உயிர் கடிது போகும். உயிர் தான் உடலை எடுத்தது. உடம்பு உயிரைப் பெறவில்லை என்ற தத்துவங்கள் நன்கு புலப்படும். மனதில் கலிநான் துபரத்திற்க விந்து என்றும் உலக அமைப்பிலும் இந்த ஒரு நிலை இருக்கக் காண்கின்றேம். இரவின் பின் பகல் பகலின்பின் இரவு மழையின் பின் வறட்சி வறட்சியின் பின் மழை உயர்வின் பின் தாழ்வு. இதைக் கண்ணுல் கண்டால் இந்த போன்று இன்பத்தின் பின் துன்பமும் உண்டு என்று யாவருமே ஏற்றுக் கொள்ள வேண்டும்.

அடுத்து இந்த அருட் செல்வம் தவத்தினுல்; எல்லா உயிரிடத்திலும் கொள்கின்ற அன்பால் பெறப்படுவது. இந்த செல்வம் எத்தனை எத்தனை பிறவிக்கும் புண்ணிய ஊற்றம் தருவதாய் பெருகி வந்து முடிவில் அடைதற்கரிய பேரின்ப முத்தியைத் தருவது.

ஆகவே தான் அருள் நிறைவு பெற்று வாழ்வதற்காக ஒழுங்காக நடவுங்கள் உண்மையாக இருங்கள். சிறுமை பெருமையில் சிக்குப் படாது சிவராசிகளிடத்து அன்புடன் வாழுங்கள். அறிதற்கரிய கடவுளை அடைதற்கு அதுவே வழியாகும் என்று பெரியோர் பலரும் இவ்வுலக மக்களாய எமக்கு வலி உறுத்திச் சென்றனர். இத்தகைய அருட்செல்வத்தை நாடநாமும் முயல்வோமாக.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு. வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org